கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை
மாதம் இருமுறை

517

கேட்டீர்களா!

இந்தியாவில் டெலிவிஷன்

டெலிவிஷன் என்னும் ஒளி-ஒலி பரப்பி முறையைக் கொண்டுவர இந்திய சர்க்கார் ரேடியோ இலாகா பரிசீலித்து வருகிறது. ஆரம்பத்தில் பம்பாயில் டெலிவிஷன் நிலையம் பரீட்சார்த்தமாக அமைப்பது என்று யோசனையாம். இந்தச் சிறிய நிலையத்துக்கு ஆண்டுதோறும் 25 லக்ஷ ரூபாய் செலவாகுமாம். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த முயற்சி இடம் பெறுமாம்.

கேடு விளைவிக்கும் சினிமா

டில்லியில் 13 ஆயிரம் தாய்மார்கள் சேர்ந்து பிரதம மந்திரி நேருவுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்களாம். அதில் குழந்தைகள் பணம் திருடியாவது சினிமாவுக்குப் போய்விடுகிறார்கள் என்றும், இன்றைச் சினிமாப் படங்கள் நம் குழந்தைகளைப் பிஞ்சிலேயே கெடுத்துவிடக் கூடிய நிலையில் இருக்கின்றன என்றும் கூறியிருக்கிறார்கள். குழந்தைகளைக் குற்றங்கள் இழைக்க இத்தகைய படங்கள் அதிலும் குறிப்பாக அமெரிக்கப் படங்கள் தூண்டுவதால் இதை உடனே சர்க்கார் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேரு இதுபற்றிச் சிந்தித்துப் பார்ப்பதாக உறுதி கூறியிருக்கிறாராம்.

ருஷ்யாவுக்கு மாணவர் கோஷ்டி

ருஷ்யாவில் கல்விமுறை, மாணவர் நிலை, குழந்தைகள் பாதுகாப்பு இவற்றை நேரில் அறிந்து வருவதற்காக இந்திய சர்க்கார் முதல் முதலாக ஒரு மாணவர் கோஷ்டியை அனுப்பப்போகிறது. இந்தக் கோஷ்டி செப்டம்பர் மாதத்தில் ருஷ்யா செல்லுமாம்.

சட்டம் படித்த குருடன்

ராஜேந்திரன் என்ற பம்பாயைச் சேர்ந்த பையன் எட்டாம் வயதிலேயே முழுப் பொட்டையாகிவிட்டான். ஆனால் நம்பிக்கை இழக்காமல் எப்படியோ படித்து வந்தான். இப்போது அவனுக்கு 23 வயதாகிறது. இதற்குள் அவன் எந்தப் பரீட்சையிலும் தோல்வியுறாமல் பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்று, சட்டப் பரீட்சையிலும் தேறிவிட்டான். ரேடியோ எஞ்சினியரிங் இவனுடைய பொழுதுபோக்கு. இவனே பல ரேடியோ செட்டுகளைத் தயாரித்திருக்கிறானும்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

இந்தச் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நடந்தது. ஸ்ரீ அழ. வள்ளியப்பா - தலைவர், எம். எஸ். ஸ்ரீநிவாஸன் - காரியதரிசி, பூவண்ணன் - உப-காரியதரிசி, ரத்னம் - பொக்கிஷதார் மற்றும் ஐந்து அங்கத்தினர்கள் கொண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 14

15 - 7 - '54

குழந்தைகளே!	பக்கம்	2
லீடர் மணி	..	3
அரசனும் அமைச்சரும்	..	9
கேளுங்கள், சொல்கிறேன்	..	10
போலீஸ்காரர்	..	13
மின்சார மோட்டார்கள்	..	14
நாமொன்று நினைக்க..	..	16
இட்லிப் பாட்டி	..	21
கண்ணன் கழக அங்கத்தினர்கள்		27
தம்பீ, கேள்!	..	29
சந்திரகிரிக் கோட்டை	..	33
தூங்கும் அழகி	..	38
எங்கள் பகுதி	..	39
கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை		
கண்ணன் கிளைக் கழகம் - மூன்றாவது அட்டை		

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி

மூன்றும் சேர்ந்த

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே.

கூடா நட்பு

ஓர் ஒட்டகமும் ஒரு நரியும் நட்புக்கொண்டன. ஒரு நாள் நரி ஒட்டகத்தைப் பார்த்து, "அண்ணே! ஆற்றின் அக்கரையில் கரும்புத்தோட்டம் இருக்கிறது. என்னால் நீந்திச் செல்ல முடியாது. என்னையும் உன் முதுகில் சுமந்து சென்றால் வேண்டிய மட்டும் தின்றுவிட்டுத் திரும்பலாம்' என்றது.

ஒட்டகத்திற்கு நாக்கில் ஜலம் ஊறியது. உடனே நரியைத் தன் முதுகில் சுமந்து சென்றது. கரும்புத் தோட்டத்தை அடைந்து கரும்பைத் தின்றுகொண்டிருந்தது. நரிக்கு அக்கரையிலுள்ள மீன், சிறு நண்டு முதலான ஜல ஜந்துக்களைப் பிடித்துத் தின்றது. வயிறு நிரம்பியதும் நரி திடீரென்று ஊளையிட்டுக்கொண்டு வயலை சுற்றிச் சுற்றி வந்தது. இந்த ஊளைச் சத்தத்தைக் கேட்ட கிராம மக்கள் தடிகளை எடுத்துக்கொண்டு தோட்டத்துக்கு வந்தனர். ஒட்டகம் இன்னும் கரும்பைத் தின்றுகொண்டிருப்பதைப் பார்த்ததும் அதை நையப் புடைத்து அடித்துத் துரத்தினர். பாவம்! ஒட்டகம் உடல் நோக நரியை முதுகில் ஏற்றிக்கொண்டு நீரில் கொஞ்ச தூரம் வந்ததும், "நரியாரே! நீ ஏன் சத்தம் போட்டுக்கொண்டு வயலைச் சுற்றிச் சுற்றி வந்தாய்?" என்றது.

"தீனி தின்றதும் அதுபோல் வருவது என் வழக்கம்" என்றது நரி.

ஒட்டகம் நடு ஆற்றை அடைந்ததும் நரியைப் பார்த்து, "நானும் தீனி தின்றதும் ஆற்றில் புரளுவது வழக்கம்" என்று கூறி நல்ல ஆழத்தில் புரண்டு கொடுத்தது. நரி, தண்ணீரில் மூழ்கியது.

குழந்தைகளே !

அலாரம் டைம்பீஸ் பரிசுப் போட்டிக்கு ஏராளமான கதைகள் வந்து குவிந்திருக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது ஒரே கலக்கமாக இருக்கிறது. இரவும் பகலுமாகப் படித்து வருகிறோம். அடுத்த இதழில் பரிசுப் போட்டியின் முடிவு அறிவிக்கப்படும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தன்னம்பிக்கையோடு கதை எழுதி, இந்தப் போட்டியில் பங்கு கொண்ட எல்லாக் குழந்தைகளுக்கும் முன்னதாக என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்ணனில் கவிதைக்குப் போதிய இடம் தரவில்லை என்று ஒரு பள்ளி மாணவன் எழுதியிருக்கிறான். பெரியோர்களுடைய மணி மொழிகளை வெளியிடும்படி ஒரு மாணவி கேட்டிருக்கிறாள். சித்திரப் போட்டி வைக்கும்படி சிலர் எழுதியிருக்கிறார்கள். உலக அநுபவத்தை ஒட்டிய பழங்காலத்துக் கதைகள் பலவற்றை வெளியிடும்படி சில ஆசிரியர்கள் விரும்புகிறார்கள். இப்படிப் பல கடிதங்கள் பல யோசனைகள் கூறி வந்திருக்கின்றன.

இத்தகைய கடிதங்களை நான் பெரிதும் வரவேற்கிறேன். சாத்தியமான வரையில் உங்கள் யோசனைகளை ஏற்றுக்கொண்டு கண்ணனைச் சிறப்பாக்க முயன்று வருகிறேன். இனியும் முயல்வேன். சிறுவர்களுக்கான கவியரங்கம் ஒன்று ஆரம்பிக்கிறேன். சிறுவர்கள் கவிதைகளை எழுதியனுப்பலாம். உங்களுக்கே உற்சாகமிருப்பது தெரிந்தால்தானே நான் அதில் ஈடுபடமுடியும்? நாங்களாக எண்ணுவதும் நீங்களாக விரும்புவதும் சேரும்போதுதான் சிறந்த அபிவிருத்தி உண்டாகிறது. கண்ணனை எப்பொழுதும்போல் உங்களுடைய சொந்தப் பத்திரிகையாகக் கருதுங்கள். எல்லாம் ஏற்பட்டுவிடும்.

'அருமையான சம்பவங்கள்' என்ற பகுதி அடுத்த இதழில் ஆரம்பமாகிறது. இத்தச் சம்பவங்கள் உங்களுக்குத் தெரிந்த சம்பவமாக இருக்கலாம். நீங்கள் கேள்விப்பட்ட சம்பவமாக இருக்கலாம். வருகிற கட்டுரைகளைப் பார்த்தால் இந்தப் பகுதி மிகவும் சுவாரஸ்யமான பகுதியாக இருக்கும்போல் இருக்கிறது. போகப் போகப் பார்க்கலாம்.

கண்ணன் வெளியீடுகளைப் பற்றிச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன். விலைப்பட்டியல் கேட்டவர்களுக்கெல்லாம் அனுப்பிக் கொண்டும் இருக்கிறோம். கண்ணன் வெளியீடுகள் ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையுள்ள குழந்தைகளுக்குத் தரக் கூடிய சிறந்த பரிசு. பிறந்த நாளுக்கும் மற்றும் பலவிசேஷ நாட்களுக்கும் ஸெட் ஸெட்டாகப் பரிசு கொடுக்க இந்த வெளியீடுகள் உதவும். விலை மலிவு. ஆனால் மதிப்பு வாய்ந்த புத்தகங்கள். நல்ல பதிப்பு.

ஆசிரியர்

லீடர் மணி

'ஆர்வி'

மணிக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது. கூரைக் கட்டிடமாகவும் சிறியதாகவும் இருந்த அவனுடைய கிராமப் பள்ளிக்கூடம் எங்கே? ஆயிரம் பேர் படிக்கும் இந்தப் பெரிய ஹைஸ்கூல் எங்கே? பெரிய ஹைகோர்ட்டைப்போல இருந்த அந்தக் கட்டிடத்தைப் பார்க்கும்போதே மணிக்குப் பிரமிப்பாக இருந்தது. டம் டம்மென்று மிதிபடும் மரத்தினாலான படிக்கட்டு வழியாக மாடியிலும் வகுப்பறைகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டபோது அவனுக்குப் பெருமூச்சே வந்தது. வாத்தியார்கள் எல்லாம் குப்பு வாத்தியாரைப் போலவா இருந்தார்கள்? இல்லை; இல்லவே இல்லை. குப்பு வாத்தியார் சட்டை கூடப் போட்டுக்கொள்ளாமல் மேல் துண்டோடு பள்ளிக்கூடத்தை நடத்தி விடுவாரே; அப்படியா இங்கே? அங்கே பள்ளிக்கூடத்தில் இருப்பதற்கும் வீட்டில் இருப்பதற்கும் அதிக வித்தியாசமே இருக்காதே, அதைப் போலவா இங்கே? எல்லாம் வேறு மாதிரியாக இருந்தது. ஆசிரியர்களில் சிலர் தலைப்பாகை வைத்துக்கொண்டு, பஞ்சக் கச்சமும் பான்ட்டும் அணிந்திருந்தார்கள். சிலர் ஜிப்பாவும் வேஷ்டியும் அணிந்திருந்தார்கள். தலைமையாசிரியர் தர்மலிங்கம் பிள்ளை சூட்டு அணிந்திருந்தார். அவரைக் குப்பு வாத்தியாரைப் பார்க்கப் போவதுபோல் அவ்வளவு எளிதில் பார்க்கப் போய்விட முடியுமா, என்ன? வாசலில் பியூன் நாகப்பன் மீசையைக் கூராக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். தர்மலிங்கம் பிள்ளை தம் இடத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாக அவர் தலைக்குமேல் இருந்த மின்சார விசிறி விர்-விர்ரென்று சுற்றிக்கொண்டிருந்தது. பள்ளிக்கூடத்தில் சேர்ந்ததும் மணியின் அப்பா தலைமையாசிரியரிடம் விடைபெற்றுச்செல்ல எண்ணினார்.

உள்ளே தர்மலிங்கம் பிள்ளை யாரையோ தடாபுடா என்று கோபித்துக்கொண்டார். யார்

யாரோ சேர்ந்து கடகடவென்று மூக்கில் கழி முறிவதுபோல் சிரித்தார்கள். தர்மலிங்கம் பிள்ளையின் அறை வாசலை எட்டி எட்டிப் பார்த்துவிட்டு ஆசிரியர்கள் ஓரமாகவே சென்றனர். இந்தக் கெடுபிடியையெல்லாம் பார்த்த மணிக்கு, ஹெட்மாஸ்டர் என்றால் என்னவோ, ஏதோ என்ற மலைப்பான எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அவர் நிச்சயம் நம்மைப்போல் சாதாரண மனிதராக இருக்க முடியாது என்ற எண்ணம் தோன்றியது. இருபது அடி உயரமுள்ள ஒரு வீரன் சிலையை உருவகப்படுத்திக்கொண்டு நின்றான்.

அவனுடைய அப்பாவுக்கு உள்ளே அழைப்பு வந்தது. மணியும் ஒடுங்கிப் பதுங்கிக் கொண்டே உள்ளே போனான். ஹெட்மாஸ்டருடைய இடம் தனியாக இருந்தது. எதிரே வேறு யாரோ இருவர் உட்கார்ந்திருந்தார்கள்.



"என்ன?" என்று பெரிய உருண்டை விழிகளை உருட்டினார் தர்மலிங்கம் பிள்ளை.

மணி மெல்ல அவரை ஏறிட்டுப் பார்த்தான். இருபது அடி இல்லாவிட்டாலும் ஆள் நல்ல ஆஜானுபாகுவாகத்தான் இருந்தார். வயசு ஐம்பது இருக்கும். கைகள் பையன்களை அடித்து அடித்துத் தானோ என்னவோ என்று நினைக்கும்படி நீளமாய் இருந்தன.

"பையனை விட்டு விட்டுப் போகிறேன். சொல்லிக்கொண்டு போகலாம் என்று வந்தேன்!" என்றார் அவன் அப்பா.

"ம்..பையனைச் சேர்த்தாச் சல்லே?"

"ஆச்சு."

"பணம் கட்டிட்டீங்களோ? புத்தகம் எல்லாம் வாங்கிக் கொடுத்திட்டீங்களோ?"

"எல்லாம் ஆச்சு."

"அப்பப் போய் வாங்க! யாரு தம்பி, இந்தப் பையன்தானே?"

"ஆமாம். புதுசு; பயப்படறான்."

"ஆங்..பயப்படறவன் ரொம்பப் பேரை நான் பார்த்துட்டேன். இப்பப் பயப்படுவான்; அப்புறம் பயமுறுத்துவான். ஏண்டா தம்பி! அப்படித்தானே?"

ஹெட்மாஸ்டரின் குரல் வெங்கலப் பானையைத் தட்டுவதுபோல் கணீரென்று இருந்தது. மணிக்கு உள்ளூற உதறல்தான்.

"சரி ஓடு..உன் வகுப்புக்கு. இனிமேத்தான் செக்ஷன் பிரிப்பாங்க. அது வரையிலே எல்லாரும் சேர்ந்துதான் உக்காரணும். ஓடு..சரி..நீங்க போயிட்டு வாங்க!" என்று மணியையும் அவனுடைய அப்பாவையும் அனுப்பி வைத்தார் ஹெட்மாஸ்டர்.

புதியதாக வாங்கிய புஸ்தகங்களைச் சுமந்துகொண்டு மணி முதல் படிவத்துக்குள் நுழைந்தான். அங்கே ஏதோ வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பாடம் ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால் ஆசிரியர் கதை சொல்லிக்கொண்டிருந்தார்.

மணி விடுவிடென்று திறந்த வீட்டில் நுழைவதுபோல் ஒருவரையும் ஒன்றும் கேட்காமல் உள்ளே போய் உட்கார இடம் பார்த்துக் கொண்டிருந்தான். வகுப்பில் சில மாணவிகளும் இருந்தார்கள். அவர்களும் மாணவர்களுமாக மணியையே கவனித்தபடி இருந்தார்கள். ஆசிரியர் கொஞ்சம் வேடிக்கையான ஆசாமி. அவர் முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு அவனையே பார்த்தார். எல்லாரும் அடக்க முடியாதபடி சிரிப்பை அடக்க முயன்றார்கள்.

"டேய்..அப்பா..இடம் சௌகரியமாகக் கிடைத்ததா?"

எல்லாரும் மணி பதில் சொல்ல எழுந்ததும் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்கள். மணிக்கோ ஒன்றும் புரியவில்லை. விழி விழி என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு விழித்தான்.

"கொஞ்சம் இப்படி வந்துவிட்டு போறியா?" என்றார் ஆசிரியர்.

மணி ஓர் அடி முன்னால் எடுத்து வைத்தான்.

"அப்படியே நீங்க கொண்டு வந்த புத்தகத்தையும் கையிலே எடுத்துக் கொண்டால் தேவலை!" என்றார் ஆசிரியர்.

ஆசிரியர் கொஞ்சலாகச் சொல்லச் சொல்ல மாணவ மாணவி

களின் சிரிப்பு அதிர்வேட்டுச் சிரிப்பாக எழுந்துகொண்டேயிருந்தது.

மணிக்கு அறியாமை ஒரு புறம்; ஆத்திரம் ஒரு புறமாக வந்தது. முகமெல்லாம் ரோசத்தினுல் சிவந்து விட்டது. ஏதோ ஒரு விபரீதமான இடத்துக்கு வந்து விட்டோமோ என்று திகைத்த படியே புத்தகப் பையை எடுத்துக் கொண்டு மேஜையருகே வந்தான்.

"இப்படி நில்லுங்கோ, ஸார்!" என்ருர் ஆசிரியர், மரியாதைப் பதம் போட்டு.

மணி அவர் குறிப்பிட்ட இடத்தில் நின்ருன்.

"கொஞ்சம் நான் சொல்வதைக் கவனிக்க வேண்டும். . என்ன?"

மணி தலையை அசைத்தான்.

"நீங்க யாரு?"

"என் பேரு எஸ். சுப்பிரமணியன்."

"எங்கே வந்தீர்கள்?"

"இன்னிக்குத்தான் பள்ளிக்கூடத்திலே சேர்ந்தேன். ஹெட்மாஸ்டர் வகுப்புக்குப் போகச் சொன்னுர். வந்தேன்."

"எந்தப் படிவம்?"

"முதல் படிவம்."

கேள்வி-பதிலுக்காக வகுப்பு, சிறிது நேரம் அமைதியாக இருந்தது. ஆசிரியர் வகுப்பைப் பார்த்து, "டேய், இவர் புதிய பையன்டா! இன்னிக்குத்தான் வந்து சேர்ந்திருக்கான்டா! ஆமாம்; அது சரி, பையா, உங்க ஊர் பட்டிக்காடோ?" என்று மணியிடம் கேட்டார்.

மீண்டும் அதிர்வேட்டுச் சிரிப்பு எழுந்தது. மணி ஒன்றும் பதில் சொல்லவில்லை. வாயைத் திறந்தால் அழுகை வெடித்துக் கொண்டு வரும்போலிருந்தது.

"சுப்பிரமணியம்! ஹெட்மாஸ்டர் உன்னை இங்கே யாரிடமும் சொல்லாமல் போய் உட்காரச் சொன்னுரா?"

"இல்லை."

"இதென்ன, ரெயில்வே ஸ்டேஷனு? சினிமாக் கொட்டகையா? டிக்கட் வாங்கினதும் நேரே உள்ளே நுழைய?"

"அங்கே கூட டிக்கட் செக் பண்ணினப்புறம்தான் ஸார், போகலாம். கேட்டிலே ஒருத்தன் நிற்பான், ஸார்!" என்ருர்கள் சில மாணவர்கள்.

மணி அப்படிச் சொன்ன மாணவர்களையெல்லாம் ஒரு முறை பரிதாபமாகப் பார்த்தான்.

தாயார்: (கணக்குப் பரீட்சைக்குப் படிக்கும் பையனைப் பார்த்து) டேய், நீ திண்ணையில் உட்கார்ந்து கொண்டு படிக்கிறியே, உன்னை நாலு பேர் நாலு சொன்னுல் என்னடா செய்வாய்?

மகன்: நாலு பேர் நாலு சொன்னுல், நூறு பேர் எவ்வளவு சொல்வார்கள் என்று கண்டு பிடிக்கட்டுமா? வி. சரஸ்வதி;

"நான் இங்கே ஒருவன் உட்கார்ந்திருக்கேனே.... அதுகூடவா தெரியல்லே உனக்கு? என்னைக் கேட்க வேண்டாமா? உன்னை முதலில் அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டாமா? சத்திரத்துச் சாப்பாட்டுக்கு நுழையறவனைப் போல நுழைஞ்சால் என்ன அர்த்தம்?"

மணிக்கு அப்போதுதான் தன் தவறு தெரிந்தது. வகுப்பில் ஆசிரியர் இருக்கும்போது அவர் அநுமதியின்றி உள்ளே போவது பிசகுதான் என்று அவன் மனத்தில் பட்டது. ஆனாலும் தெரியாமல் செய்துவிட்ட இந்தச் சிறிய தப்புக்கு இப்படியா தன்னை அவமானப் படுத்துவது?

பையன்களும் இந்த ஊரில் ரொம்பப் பொல்லாதவர்களாய், இரக்கமற்றவர்களாய் இருப்பார்கள் போலிருக்கிறதே! 'பட்டணத்துப் பிள்ளைகள் அல்லவா? பட்டிக்காட்டிலிருந்து வருபவனைக் கண்டால் அத்தனை இளப்பமாக இருக்கிறது!' என்று எண்ணிய மணி, "நான் தெரியாமல் செய்துவிட்டேன். ஏதோ ஞாபகப் பிசகு. மன்னிக்கவேண்டும்" என்று தொண்டையை அடைக்க ஆசிரியரைக் கேட்டுக்கொண்டான்.

"சரி போ! இது ஹைஸ்கூல்; உங்க ஊர்த் திண்ணைப் பள்ளிக்கூடம் அல்ல. தெரிந்ததா? இங்கே சில விதி முறைகள் உண்டு. அதைத் தெரிந்து கொள், முதலில்" என்றார் ஆசிரியர்.

"எங்கள் தெருவில்தான் ஸார், இவன் வந்திருக்கிறான். நான் இவனுக்குச் சொல்றேன், ஸார்!" என்றான் ஒரு பையன்.

மணி அந்தப் பையனைத் திரும்பிப் பார்த்தான். களை பொருந்திய முகம். கபடு இல்லாத பார்வை. அவனைப் பார்த்தவுடனேயே மணிக்கு அவனிடம் ஒரு நம்பிக்கை பிறந்துவிட்டது. நன்றி மிகுந்த பார்வையால் அவனுடைய உதவியை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தான்.

"ணங் ணங் ணங்.."

வகுப்பு முடிந்தது. எல்லாப் பையன்களும், ஏன், பெண்கள்கூட அவனையே திரும்பிப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

மணி புது நாட்டுப் பெண்ணைப் போல் தலையைக் குனிந்தவாறே உட்கார்ந்திருந்தான். அவன் மனத்தில், 'இந்தப் பள்ளிக்கூடத்தில் எப்படித்தான் படித்துப் பெயர் சொல்லப் போறேனோ?' என்ற கேள்வி, பயத்துடன் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

'பெரிய ஹெட்மாஸ்டர், கருணையற்ற ஆசிரியர், அன்பில்லாத மாணவர்கள்—சே! ஏன் இந்தப்பள்ளிக்கூடத்துக்கு வந்தோம்?' என்று எண்ணியது அவன் மனம்.

அன்று மாலை பள்ளியைவிட்டு வெளியே வரும்போது இத்தகைய எண்ணமே அவன் மனத்தில் மேலோங்கியிருந்தது. 'கட்டிடம்தான் பெரிசுபோலிருக்கு! மற்றது ஒண்ணும் இருக்காதுபோலிருக்கு!' என்று முணுமுணுத்தவாறே அவன் தன் அத்தையின் வீடு இருந்த தெற்கு வீதியை நோக்கி நடந்தான்.

"சுப்பிரமணி! சுப்பிரமணி!" என்று கீச்சுக் குரலில் பின்னால் யாரோ கூப்பிட்டார்கள். மணி திரும்பினான். (தொடரும்.)

அரசனும் அமைச்சரும்

பாரதத்தின் மீது பதினேழு தடவைகள் படையெடுத்துச் சரித்திரப் புகழ் பெற்றவன் கஜினி மாமூது.

ஒரு சமயம் அவனுடைய படை வீரர்கள் தங்கள் மனம் சென்றபடி கிராமங்களை எரித்து, பொருள்களைச் சூறையிட்டார்கள்.

இவர்களுடைய அக்கிரமங்களைக் கவனித்த அமைச்சர் ஒருவரின் மனம் மிகவும் வேதனை அடைந்தது. 'படை வீரர்கள் செய்யும் அக்கிரமத்தால் நாடே பாலைவனமாகப் போய்விடும் போலிருக்கிறது! அரசனுக்கோ நாட்டின் நலனில் நாட்டமில்லை!.. அரசனை எப்படித் திருத்துவது?' என்று அவர் ஆலோசிக்கலானார்.

ஒரு நாள் அமைச்சர் அரசனிடம் சென்று, "அரசே! நான் சிறுவனாக இருந்தபோது ஒரு மகான் எனக்குப் பட்சிகளின் பாஷையைக் கற்றுக் கொடுத்தார்" என்று கூறினார்.

"ஓ! அப்படியா? ஆனால் நாளை நாம் வேட்டையாடக் காட்டிற்குச் செல்வோம். காட்டிலுள்ள பட்சிகள் என்ன பேசுகின்றன என்பதை அப்போது சொல்லுங்கள்" என்று கூறினான் கஜினி.

மறு நாள் வேட்டையாடிவிட்டு வருகின்ற வழியிலே ஒரு மரத்தின் கிளையில் இரண்டு ஆந்தைகள் உட்கார்ந்து கத்திக்கொண்டிருந்தன. அவைகளைக் கண்டதும் அரசனும் அமைச்சரும் குதிரைகளை நிறுத்தினார்கள்.

அரசன் அமைச்சரிடம், "அமைச்சரே! இப்போது இந்த ஆந்தைகள் என்ன பேசிக்கொள்கின்றன?" என்று கேட்டான்.

அறிவில் சிறந்த அந்த அமைச்சர் கூறினார்:

"அரசே! இந்த ஆந்தைகளில் ஒன்றிற்கு ஓர் ஆண் குழந்தையும் மற்றதற்கு ஒரு பெண் குழந்தையும் இருக்கின்றனவாம். அந்தக் குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதுபற்றி அவைகள் பேசிக்கொண்டிருக்கின்றன...."

"ஓகோ!"

"ஆண் ஆந்தையின் தந்தை மற்றதைப் பார்த்து, 'நீ உன்னுடைய பெண்ணை என் மகனுக்குத் திருமணம் செய்விக்க விரும்புகிறாய். அப்படியானால் சீரழிந்துபோன ஐம்பது கிராமங்களைச் சீதனமாகத் தர முடியுமா?' என்று கேட்கிறது.

"இதற்குப் பெண் ஆந்தையின் தந்தை, 'ஆண்டவன் கருணையால் கஜினி மாமூது இருக்கிற வரையில் அழிந்த கிராமங்களுக்குக் குறைவேது! ஐம்பதென்ன....? ஐந்நூறு அழிந்த கிராமங்கள்கூடத் தருகிறேன்' என்று கூறுகிறது."

இவைகளைக் கேட்டதும் அரசன் வெட்கித் தலை குனிந்தான்.

"அமைச்சரே! நீங்கள்தாம் என் கண்களைத் திறந்து விட்ட தெய்வம்! நாளைக்கே நாட்டை அழிக்கும் படை வீரர்களைத் தடுத்து நிறுத்தி விடுகிறேன். அப்போதுதான் அல்லா என்னை மன்னிப்பார்" என்றான்.

இதைக் கேட்ட அந்த மந்திரியின் மனத்தில் மகிழ்ச்சி பொங்கியது. வேதனை ஒழிந்தது.

—சங்கர்.

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. உங்களை வெறுமே சிரிக்கச் செய்யவேண்டும் என்று விடை சொன்னால், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன்படவும் வேண்டும்; உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம். ஆ—ர்]

வி. குமார், சென்னை-4

நூறு வால்ட் பல்பு ஒன்று ஒரு நிமிஷம் எரிந்தால் மீட்டரிலிருக்கும் சக்கரம் எத்தனை தடவை சுற்றும்?

மின்சார சம்பந்தமாக வால்ட் என்று ஒரு சொல் கிடையாது. 'வாட்' என்று ஒரு சொல்லும், 'வோல்ட்' என்று ஒரு சொல்லும் உண்டு. வோல்ட் என்பது மின் சார ஓட்டத்தின் அழுத்தத்தைக் குறிக்கும். வாட் என்பது மின்சார சக்தியின் செலவைக் குறிக்கும்.

ஒரு 100 வாட் பல்பு ஒரு நிமிஷத்தில் $1 \times 1/60$ வாட்-மணி ஓட்டத்தைப் பயன்படுத்தும். $100 \times 1/60$ வாட்-மணி $= 5/3$ வாட்மணி $= \frac{5}{3 \times 1000}$ கிலோ வாட் மணி. அதாவது, 1/600 கிலோ வாட் மணி. கிலோ வாட் மணி என்பதே ஒரு யூனிட்டு. ஆகவே, ஒரு 100 வாட் பல்பு ஒரு நிமிஷத்தில் 1/600 யூனிட்டை உபயோகிக்கும்; அதாவது .0016 யூனிட்டு. சில சிறந்த மீட்டர்களில் ஒரு யூனிட்டின் 1/10 பகுதிகளும், 1/100 பகுதிகளும் காட்டப்பட்டிருக்கும். அவற்றில் சக்கரம் 10 தடவை சுற்றினால் முள்ளானது 1/100 பகுதியில் ஒரு கட்டம் நகரும். அப்பேர்ப்பட்ட மீட்டரில் ·0016 யூனிட்டு செலவாவதைக் குறிப்பதற்குச் சக்கரம் 1.6 தடவை சுற்றும்.

ஆர். ராஜன், பாளையங்கோட்டை.

நியூட்டனின் வட்டத்தட்டு பற்றி விவரிக்கவும். அதிலுள்ள வர்ணங்களை விவரித்தெழுதவும்.

ஏழு அடிப்படை நிறங்களைத் தக்க விகிதத்தில் கலந்தால், வெண்ணிற ஒளி தோன்றும். இதை நிரூபிப்பதற்கான கருவியே நியூட்டனின் வட்டத் தட்டு என்பது.

அட்டையால் செய்யப்பட்ட வட்டமான தட்டு ஒன்றை, ஏழு வட்ட கோணப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கும். இவையெல்லாம் ஒரே அளவுள்ளவை அல்ல. கணக்கிட்டுப் பார்த்து, ஒவ்வொரு நிறத்தின் வட்டக் கோணப் பகுதியும் இன்ன அளவுள்ளதாக இருக்கவேண்டும் என்று தெரிந்து, அதன்படியே அவைகளுக்கு வர்ணம் இட்டிருக்

கும். ஊதா, கரு நீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு என்னும் ஏழுமே அந்த நிறங்கள்.

அந்த வட்டத் தட்டை ஏற்ற படி பொருத்தி, விரைவாகச் சுழலச் செய்தால் அதிலுள்ள நிறங்கள் தனித்தனியே தோன்றாமல், அந்தத் தட்டு வெண்ணிறமாகத் தோன்றும்.

சு. லெட்சுமணன்,
மன்னார்குடி.

ஹைட்ரஜன் குண்டுகளையும், ஜலவாயுக் குண்டுகளையும் கண்டு பிடித்த தேசம் எது? அதற்கு உதவிய விஞ்ஞானி யார்?

ஹைட்ரஜன் குண்டு என்பதும் ஜலவாயுக் குண்டு என்பதும் ஒன்றேதான். ஒருவேளை அணுக் குண்டையும் ஹைட்ரஜன் குண்டையும் பற்றி இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கலாம்!

அணுக்குண்டும் ஹைட்ரஜன் குண்டும் ஒரே நாளில் கண்டுபிடிக்கப் படவில்லை; ஒரே விஞ்ஞானியாலும் கண்டுபிடிக்கப் படவில்லை. நெடுங்காலமாக, இந்தத் துறையில் முயன்றவர்களில் மூவரை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஒருவர் ஐன்ஸ்டைன் என்னும் யூதர்: மற்றொருவர் ரதர்போர்டு என்னும் ஆங்கிலேயர். மூன்றாமவர் ஆட்டோ ஹான் என்னும் ஜெர்மானியர். ஐன்ஸ்டைன் என்பவர் பொருளைச் சக்தியாக மாற்றக் கூடும் என்றும், மிகச் சிறு அளவுள்ள பொருளிலிருந்து, மிகப் பிரம்மாண்டமான சக்தியைப் பெறக்கூடும் என்றும் கூறினார். அணுக்களின் அமைப்பு எவ்வகையானது என்று ரதர்போர்டு விளக்கினார். ஹான் என்பவர் அணுவின் உட்கருப்பிளவைக் கண்டுபிடித்தார். யூரேனியம் அணுவானது பிளவுற்றபோது, பிரம்மாண்டமான சக்தி வெளிப்படுகிறது என்றும் அவர் விளக்கினார்.

எஸ். பாலசுப்பிரமணியன்,
வள்ளியூர்.

சினிமாப் படங்களில் சப்தம் எங்கிருந்து வருகிறது?

விளிம்போரத்திலிருந்து. சினிமாப் பட பிலிமின் ஒரு விளிம்போரத்தில் கோடு கோடாகத் தெரியும். இவை ஒலியின் படப் பதிவுகள். ஒளிமின்கலம் என்னும் அற்புதக் கருவியின் உதவியால் ஒலியின் படப்பதிவும், அந்தப் படப் பதிவிலிருந்து மீண்டும் ஒலியும் உண்டாகின்றன.

மூ. அ. முத்து சேதுபதி,
முத்தாய்ப்பாளையம்.

மழை பெய்யும்போது வானத்திலிருந்து திடுதிடுவெனக் கொட்டாமல் துளி-துளியாக விழுவது ஏன்?

மேகங்கள் இல்லாவிட்டால் மழை இல்லை. மேகங்கள் என்பவை பல் கோடிக் கணக்கான நுண்ணிய நீர்த் துளிகளின் தொகுதிகள். அவை நீர் நிறைந்த ஏரிகள் அல்ல.

சௌகரியமான நிலைமை ஏற்பட்டபோது நீர்த்துளிகள் தனித் தனியே பல இடங்களிலிருந்து கீழே விழத் தொடங்குகின்றன. அந்தத் துளிகள் மிகவும் நுண்ணியவைகளாயிருந்தால், அவை மிக மெதுவாகவே கீழே விழுகின்றன. பல தடவைகளில் கீழுள்ள வெப்பத்தால் மீண்டும் நீராவியாக மாறிவிடுகின்றன; பூமியில் படுவதே இல்லை.

சில வேளைகளில் வாயு மண்டலத்தில், நீராவி அதிகமாக இருந்து, ஏற்ற குளிர்ந்த நிலையும் இருக்கும்போது, இந்தச் சிறிய நீர்த்துளிகள் பல ஒன்றாகி, சற்றே பெரிய நீர்த்துளிகள் ஆகின்றன. மற்றவை அவற்றோடு சேருமுன் (அப்படிச் சேர்ந்தால்தானே திடுதிடுவெனக் கொட்ட முடியும்?) அவை கீழே விழத் தொடங்கி விடுகின்றன. ஆதலால்தான் மழை துளி - துளியாக விழுகிறது.

எஸ். ஜயராமன், சென்னை-4.

பசிபிக் என்றால் என்ன?

'பசிபிக்' என்றால் 'அமைதியுள்ள' என்பது பொருள். ஸ்பெயின் நாட்டிலிருந்து மேற்காகச் சென்று, இந்தியாவைக் கண்டு பிடிக்க முயன்ற வீரர்களில் மகெல்லன் பிரபுவும் ஒருவர். தென் அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் உள்ள ஒரு ஜல சந்தியின் வழியாக அவருடைய கப்பல் போகும்போது பெரும்புயல்கள் வீசின. அந்த ஜலசந்தியைக் கடந்ததும், மிகப் பெரிதாயும் அமைதியாயும் உள்ள ஒரு சமுத்திரத்தை அவர் கண்டார். அதற்கு, 'அமைதியுள்ள பெருங்கடல்' என்று பெயரிட்டார். அதுவே பசிபிக் மகா சமுத்திரம்.

ஸ்ரீகாந்த், காந்திநகர்.

மிகவும் வேகமாகப் பறக்கும் ஆகாய விமானம் எது?

டக்ளஸ் ஸ்கை - ராக்கெட் (Douglas Sky-rocket) என்னும் விமானம். இது மணிக்கு 1,327 மைல் வீதம் பறந்திருக்கிறது. ஆகையால், ஒலியின் வேகத்தை விட இரண்டு மடங்கு வேகத்துக்குமேல் இது பறந்திருக்கிறது.

கே. எஸ். பார்வதி, விழுப்புரம்.

மிகவும் ஆழமான கிணறு எது?

அமெரிக்காவில் யுனைடெட் ஸ்டேட்ஸில் உள்ள வையோமிங் என்னும் மாகாணத்தில் தோண்டப்பட்ட எண்ணெய்க் கிணறு. இதன் ஆழம் 20,521 அடி. நாலு மைலுக்குச் சற்றே குறைவு.

வி. சந்தானம், திருச்சிராப்பள்ளி.

விஞ்ஞானம் நல்லதா, கெட்டதா? ஏன்?

விஞ்ஞானம் நல்லது. முக்கியமானதும்கூட. உலக வாழ்க்கைக்குச் சௌகரியமானவையும் உலக வாழ்க்கையை இனிதாக்குபவையும் ஆன எத்தனையோ பொருள்களையும் கருவிகளையும் விஞ்ஞானிகள் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக, பல நூற்றாண்டுகளாகத் திரட்டிய விஞ்ஞானச் செய்திகளால் உலகத்தையும் அதில் நிகழும் செய்திகளையும் நாம் நன்றாக அறிய முடிகிறது.

மூன்றாவதாக, விஞ்ஞானத் துறையில் உண்டாகும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, விஞ்ஞானிகள் கையாளும் முறைகளை வாழ்க்கையின் மற்றத் துறைகளிலும் உபயோகித்துப் பயனடைய முடிகிறது.

'தவம் நல்லதா, கெட்டதா?' என்பதைப் போன்றதே இந்தக் கேள்வியும். தவம் நல்லது; ஆனால், கெட்டவர்கள் தவம் செய்தால் உலகத்துக்குத் தீமை விளைவதும் உண்டு. அது போலவே தான் இது.

கையில் தடி வைத்திருப்பார் போலீஸ்காரர்
காக்கிச் சட்டை போட்டிருப்பார் போலீஸ்காரர்
பையில் ஊதல் வைத்திருப்பார் போலீஸ்காரர்
பலத்த பூட்ஸும் அணிந்திருப்பார் போலீஸ்காரர்.

உயரத் தொப்பி வைத்திருப்பார் போலீஸ்காரர்
ஊரைச் சுற்றி வந்திடுவார் போலீஸ்காரர்
பயத்தை யெல்லாம் போக்கிடுவார் போலீஸ்காரர்
பட்ட ணத்தில் அதிகமுண்டு போலீஸ்காரர்.

திருடர் களைப் பிடித்திடுவார் போலீஸ்காரர்
ஜெயிலுக் குள்ளே போட்டிடுவார் போலீஸ்காரர்
சுறுசு றுப்பா யிருந்திடுவார் போலீஸ்காரர்
துப்ப றியும் வேலைசெய்வார் போலீஸ்காரர்.

சைக்கிள் மோட்டார் வண்டிகளை, போலீஸ்காரர்
சைகை காட்டி அனுப்பிடுவார் போலீஸ்காரர்
ஐக்கியமாய் அமைதியாக மக்கள் வாழவே
அனுதி னமும் உழைத்திடுவார் போலீஸ்காரர்.

மின்சார மோட்டார்கள்

ஈ. ஜி. என்.



ராஜனுக்கு எப்பொழுதுமே விஞ்ஞானத்தில் அலாதிப் பிரியம். தானே இயக்கும் சில இயந்திரங்களை இயற்றவேண்டும் என்று ஆசைப்பட்ட அவன் தன் சோதனைச் சாலையில் மின்சார மோட்டார் ஒன்றைச் செய்ய ஆரம்பித்தான். அவனுடைய சந்தேகங்களைப் போக்க அவனுடைய மாமாவான விஞ்ஞானப் பேராசிரியர் பெரிதும் பயன்பட்டார். அவன் செய்த இயந்திரத்தின் நுணுக்கங்களையும் அதைச் செய்த முறைகளையும் நாமும் சற்றுக் கவனிக்கலாம்.

மின்சார மோட்டார்கள் நிலை காந்தத்தினாலோ அல்லது மின்சார காந்தத்தினாலோ இயங்குகின்றன. ஆகவே நிலை காந்தக் கட்டை (Horse-shoe magnet) ஒன்றை ராஜன் வாங்கினான். (படம் 1)



இரண்டாவதாக, சுழலும் பகுதிக்காக வார்னிஷ் பூசப்பெற்ற கம்பிச் சுருளும் (Varnish coated wires) இரண்டு உலர்ந்த பாட்டரிகளும் (Dry cells) வாங்கினான்.

இந்த மோட்டாரை இயற்ற அவனுக்கு மாமாவின் உதவியின்றி முடியாது என்று தோன்றவே இவற்றைத் தூக்கிக்கொண்டு மாமாவிடம் சென்றான். அவர் அவனிடம் பின்வரும் பொருள்களைக் கொண்டுவரும்படி சொன்னார்.

1. சாதாரண கார்க்.
2. 6 நீண்ட குண்டூசிகள்.
3. ஒரு சிறிய பலகை (4"×3")

இவர்கள் செய்த மோட்டாரின் படம் மேலே காண்பிக்கப்பட்டிருக்கிறது.

கார்க்கினுடைய வட்ட வடிவமான இரு பக்கங்களின் நடுவில் இரண்டு குண்டூசிகளைக் குத்திவிட்டால், குண்டூசிகளை மையமாகக்கொண்டு கார்க் சுலபமாகச் சுழலும் என்று மாமா, ராஜனுக்குக் காட்டினார். படம் 2.



இப்பொழுது வார்னிஷ் பூசப்

பெற்ற மெல்லிய கம்பியைக் கார்க்கின்மேல் சுற்றினார், படம் 3-ல் காட்டியபடி.

நன்றாகத் தேய்த்து வார்ணிஷை நீக்கி இந்த இரு முனைகளையும் இரண்டு குண்டூசிகளுடன் பிணைத்துப் பின்வருமாறு கார்க்கில் செருகினார், படம் 4-ல் காட்டியபடி.



சுழலும் பகுதி இதுதான். இதை நிறுத்தி வைக்க முன் சொல்லப்பட்ட பலகையில் 4 குண்டூசிகளைப் பின்வருமாறு பொதித்தார், படம் 5-ல் காட்டியபடி.



இதன் மேல் மேற்சொன்ன சுழலும் பகுதி சுலபமாகச் சுற்றும் என்பதை ராஜனுக்குக் காட்டினார்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ராஜனுக்குப் புதிதாக ஒரு சந்தேகம் முளைத்தது. இதில் மின்சாரத்தை எங்கே செலுத்துவது என்று தெரியவில்லை. அதற்கு மாமா பின்வருமாறு பதிலளித்தார். மின்சாரத்தைச் செலுத்த வார்னிஷ் கம்பிகளால் சுமார் 2 அடி நீளமுள்ள இரண்டு துண்டுகளை வெட்டி இரு முனைகளையும் சுத்தமாகத் தேய்த்துப் பலகையில் படம் 6-ல் காட்டிய படி பொருத்தவேண்டும்.



இந்த இரு கம்பிகளும் சுழலும் பகுதியிலுள்ள இரண்டு (கம்பி முனைகள் பிணைக்கப் பெற்ற) குண்டூசிகளை லேசாகத் தொட்டுக் கொண்டிருக்கும். கார்க் பகுதி சுழன்றால் மாறி மாறி இரண்டு முனைகளையும் தொடும். படம் 7.



இப்பொழுது லாட காந்தத்தைப் பலகையில் வைத்துக் கம்பிகளின் மூலம் மின்சாரத்தைச் செலுத்தி, கார்க்கை லேசாகச் சுற்றிவிட்டால் மிகுந்த வேகத்துடன் கார்க் சுழலும். இதைச் செய்து பார்த்த ராஜனுக்கு அளவற்ற ஆச்சரியமும் பெருமையும் தோன்றியது. இது அவனுடைய முதல் மின்சார இயந்திரம். எங்கே, நீங்களும் செய்து பாருங்கள்!

நாமொன்று நினைக்க...

ஜயா

காட்சி 1

(மாலைநேரம். கிட்டு, சோமு இருவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

சோமு: டேய் கிட்டு! எங்கேயடா போயிருந்தாய்? எவ்வளவு நேரம் உன் வீட்டுத் திண்ணையிலே ஒண்டியாய்த் 'தவம்' பண்ணுகிறது?

கிட்டு: ஆமாம்! தவத்துக்கு முடிவு ஏதாவது கிடைச்சுதா?

சோமு: கிடைச்சுது. புத்தருக்குக் கிடைச்சாப்போல, சில உண்மைகள்!

கிட்டு: என்னடா அது?

சோமு: இப்போ எழுதியிருக்கும் பரீக்ஷையில் நாம் பாஸ் செய்யணும்னு யாரையாவது காக்காய் பிடிச்சாத்தான் நடக்கும்கிற உண்மையைக் கண்டு பிடிச்சேன்..ம்..! நீ எங்கே போயிருந்தாய்னு சொல்லவேயில்லையே?

கிட்டு: கோயிலுக்குத்தான் போயிருந்தேன்.

சோமு: ஓ! அப்போ நம்ம 'ஐடியா' தான் உனக்கும்னு சொல்லு. அதனாலேதான் கடவுளையே காக்காய் பிடிக்க ஆரம்பிச்சிட்டே!

கிட்டு: அட மேதாவி! காக்காயும் பிடிக்கல்லே, குருவியும் பிடிக்கல்லே, வீட்டிலே விளையாட இடமில்லேன்னு கோயிலுக்குப் போனேம்.. அதிருக்கட்டும், நீ எதற்காக வந்தேன்னு சொல்லவேயில்லையே!

சோமு: இப்போ நாம் இருவரும் 'பாஸ்' செய்யணும்னு, ஒரே ஒரு வழிதான் இருக்கு.

கிட்டு: என்னடா அது! சீக்கிரம் சொல்லு.

சோமு: நம் வாத்தியாரைக் காக்காய் பிடிச்சாத்தான் நடக்கும். ரகுவைப் பார்! 'பாடி கார்டு' மாதிரி வாத்தியாரையே சுத்திண்டிருக்கான்.

கிட்டு: "அட, நீ ஒண்ணு! அவன்தான் வகுப்பிலே 'பஸ்ட்' வரான். அவன் அறிவாளின்னு நம்ப வாத்தியாரே அவனை அடிக்கடி சொல்றார். நீ என்னடான்னா அவன் சுத்திண்டிருக்காங்கறே.

சோமு: எப்படியோ, சிரிப்பார் முன்னே நாம் இடறி வீழ்ந்தாப் போல இருக்கக்கூடாது!

கிட்டு: சரி! நீ என்னதான் சொல்றே? அதைச் சீக்கிரம் சொல்லித் தொலை!

சோமு: வீட்டிலே நமக்குக் கொடுக்கும் காசைச் சேர்த்து அதுக்குப் பழமாகவும், பட்சணமாகவும் வாங்கிண்டு போய் வாத்தியாருக்குக் கொடுக்கணும். அவர் 'எள்ளு'ங்கிறதற்கு முன்பு, 'எண்ணெயா'க நாம் அங்கேயே நிக்கணும். அவ்வளவுதான். அவர் கடாட்சம் நம்மேல் விழுந்ததுன்னு வெற்றி நமக்குத்தான்.

('வெற்றி! வெற்றி! வெற்றி என்று வீரராகப் பின் செல்வோம்' என்று பாடத் தொடங்குகிறான்.)

கிட்டு: அபத்தம்! போதும் நிறுத்தப்பா, உன் உளறலை! முன் செல்வோங்கிறதை மாற்றிப் பின் செல்வோம்னு பாடறியே!..ம். நம் திட்டத்தின் முதல்படியே அபசகுனங்கிற கல்லால் தட்டுப் பட்டு விட்டது.

சோமு: சரி! வார்த்தையை வளர்க்க இது நேரமில்லே. நான் நாளை காலை ஆறு மணிக்கு இங்கே வந்துடறேன். நீ ரெடியா இரு, தெரிஞ்சுதா? நம் திட்டத்தின் துவக்க விழா நாளை என்பது கவனமிருக்கட்டும்..நான் வறேன்..

காட்சி 2

நேரம்: காலை. வாத்தியார் வீடு. (அவர் பையை எடுத்துக் கொண்டு மார்க்கெட்டுக்குக் கிளம்புகிறார். அந்தச் சமயம் பார்த்துக் கிட்டுவும் சோமுவும் வருகின்றனர்.)

இருவரும்: வணக்கம், ஸார்!

வாத்தியார்: வணக்கம். எது

இவ்வளவு காலையில் நீங்க காட்சி கொடுக்கிறீங்க?

கிட்டு: ஸார்! எங்க அப்பா வந்து இதைக் கொடுத்துட்டு வரச் சொன்னர் உங்களுக்கு.

(பையிலிருந்து சுமார் ஒரு டஜன் மாம்பழங்களை எடுத்து வைக்கின்றனர் இருவரும்.)

வாத்: டேய், கிட்டு! எதற்கு இதெல்லாம் வீண் செலவு?

கிட்டு: இல்லே ஸார்! 'பங்கனபள்ளி' மாம்பழம் இது. நேற்று எங்களுக்கு ஊரிலிருந்து வந்தது.

வாத்: ஆமாம், நீங்க ஊருக்குப் போகவில்லையா, இந்த லீவிலே?

கிட்டு: இல்லே ஸார்! இந்த வெயில் காலத்துக்கு நம்ம சென்னையே எவ்வளவோ தேவலே.

வாத்: சோமு, நீ?

சோமு: எங்கப்பா ஆபீஸிலே ஒரு மாத லீவு போட்டிருந்தா. அது 'சாங்ஷன்' ஆகலே. அதனுலே யாருமே போகலே..

வாத்: நீங்க இரண்டு பேரும் இந்தப் பெஞ்சியிலே உட்கார்ந்திருங்க. இதோ கொஞ்ச நேரத்திலே வந்துடறேன், மார்க்கெட் போயிட்டு.

சோமு: ஸார்! நாங்க இருக்கும்போது நீங்க வெளியே போறதாவது? கொண்டாங்க, அந்தப் பையை! ஒரே நொடி!

(கையிலிருந்த பையை வாங்கிக்கொண்டு செல்கின்றனர். வாத்தியாருக்கு ஆச்சரியம். அவர் மனைவி வருகிருள்.)

வாத்தியார் மனைவி: இதோ பாருங்க, இந்த அரிசியைப் பொறுக்குங்க கொஞ்சம்.

வாத்: அப்போ பேப்பரையெல்லாம் நீயே திருத்து. நான் சமைக்கிறேன்!

வா. ம: என்ன பிரமாதம்! எல்லாவற்றையும் அடித்துப் பத்து மார்க்குத்தானே போடணும்? கொண்டாங்க! கட்டுப் பேப்பரையும் ஒரே நிமிஷத்தில் திருத்திப் போட்டுடறேன்.

வாத்: சரிதான், நீ அப்படிச் செஞ்சா ஐயா மறுநாளே சீட்டு வாங்கிக்க வேண்டியதுதான்.

(கிட்டுவும் சோமுவும் வருகின்றனர்.)

சோமு: ஸார்! இந்தப் பையிலே இருக்கிறதைக் கொட்டிண்டு கொடுக்கோ, ஸார்!

(வாத்தியார் பையை வாங்கிக் கவிழ்க்கிருர். முட்டை, கோஸ், காரட், பீட்ரூட் இம்மாதிரியான இங்கிலீஷ் கறிகாய்கள் கீழே விழுகின்றன.)

வாத்: டேய் சோமு! எதுக்கடா இவ்வளவு தினுசுகள்? யார் தின்கிறது இவ்வளவையும்!

சோமு: ஸார்! எங்க மாமா பெங்களூரிலிருந்து நேற்று வந்தார். அவர்தான் கொண்டு வந்தார். எங்க அப்பா உங்களுக்கும் கொஞ்சம் கொடுத்துட்டு வான்னு சொல்லி அனுப்பினர்!

(இந்தக் கலப்படமில்லாத பொய்யைக் கேட்டு கிட்டு விழிக்கிருன்.)

கிட்டு: ஸார்! நாங்க வரோம்.. பகல் 2 மணிக்கு வீட்டிலேதானே இருப்பீங்க! அப்போ வரோம்?

(சோமுவும் கிட்டுவும் விடைபெற்றுச் செல்கின்றனர்.)

வாத்: ஏது? பையன்கள் விழுந்து விழுந்து வேலை செய்கின்றனர்? காரணம் எதுவாயிருக்கலாம்?

வா. ம: அட! இது கூடவா தெரியலே? அவங்க பேப்பரைத் திருத்தும்போது, கூடக் கொஞ்சம் மார்க்குப் போடுவீங்கன்னு நினைச்சுத்தான்!

வாத்: ஆமாம்! கோஸுக்கு முன்னாடி சேர்க்க வேண்டிய சொல்லும், ருமானி மாம்பழத்தின் ருசியும், அவர்கள் வகுப்பில் இருக்கிற திறமையும் கவனத்துக்கு வந்து அதே அளவுக்கு மார்க் கிடைச்சுடப் போகிறது.

வா. ம: விளையாடாதீங்க! சிறு பிள்ளைகள் தானே, கொஞ்சம் கவனிச்சுப் போடுங்கள், மார்க்கை.

வாத்: சரி, உன் வேலையைப்பார்!

காட்சி 3

(கிட்டுவின் வீடு. அவனுடைய தாயும் தந்தையும் பேசிக்கொண்டிருகின்றனர்.)

தாய்: இதோ பாருங்க! லீவு விட்டதிலிருந்து பையன் வீட்டிலேயே தங்குவதில்லையே. நீங்க என்னன்னு விசாரிக்கக் கூடாதா?

தந்தை: விசாரிக்கிறது என்ன? அவன் தினமும் அவனோட வாத்தியார் வீட்டுக்குத்தான் போயிட்டு வரான்.

தாய்: இதைப் பரீக்ஷைக்கு முன்னாடியே வெச்சிருந்தால் எவ்வளவு நன்னா எழுதியிருப்பான். இப்போ லீவிலே ட்யூஷன் வெச்சிருக்கீங்களே!

தந்தை: ட்யூஷனாவது மண்ணாவது! அந்த சோமுப் பயலுடன் சேர்ந்துண்டு இருவருமா வாத்தியாருக்குக் குல்லாய் போடப் பார்க்கறாங்க. அது முடியுமா? அவர் விஷயத்தை உடைச்சிட்டார். அன்னிக்கு மாம்பழம் எதுன்னியே, சாட்சாத் உன் மகன் கிட்டு கொண்டு போய் அவருக்குக் கொடுத்ததுதானாம். பயல் இப்போ அஞ்சாம் படையிலே இறங்கி இருக்கான். காஷ்மீர் கம்பளம் புதுசு களவு போய் அகப்பட்டதும், பார்க்கர் பேனா வைத்த இடத்திலிருந்து மறைந்து வேறோர் இடத்திலே பிரசன்ன

மானதும், உன் மகனின் திருவிளையாடல்தான். இவன் இங்கேயிருந்து கொண்டுபோய்க் கொடுக்கிறது. அவர் அதை வாங்கிக்கொண்டு அவனுக்குத் தெரியாமல் நம்மிடம் கொடுத்துவிடுவது! பரீக்ஷைக்கு முன்னடி கிரிக்கெட் மாட்ச், டிராமா, சினிமா அப்படீன்னு சுத்திப்பிட்டு இன்னிக்கு அவர் வீட்லே பழிபாய்க் கிடந்தால் பாஸாகி விடுவானு? பாஸ்-டப்பாஸ்தான் இந்த வருஷம்!

தாய்: ஆமாம், அவன் கேக்கறப்போவெல்லாம் காசைக் கொடுத்து நீங்கதானே கெடுத்தீங்க! காசைக் கண்ணிலேயே காட்டாமெ இருந்தா, கண்ணுங் கருத்துமா படிச்சிருக்கமாட்டானு..ம்? அடுத்தாத்து அம்புஜம் கொடுத்து வெச்சவா. வயித்தை அலம்பி மாணிக்கத்தைப் பெற்ருள். ரகுப்பய, அவ்வளவு சுடிகையாக இருக்கிருன். உம்.. எனக்குன்னு வந்து பிறந்தது. நாளைக்கு 'ரிஸல்ட்' சொல்ருன்னு சொன்னன். பார்க்கலாம், பாஸான்னு?

காட்சி 4

[ரிஸல்ட் தினம். பள்ளிக்கூடத்திலே ஒரே கூட்டம். பாஸானவர்களின் கும்மாளம், பெயிலானவர்களின் கூக்குரல்!]

கிட்டு: டேய், முதலில் ரகுவின் பேரைத்தான் போட்டிருக்கு. நம்ம பேரையே காணலையே! ஒருவேளை என் கண்ணுதான் கெட்டுடுத்தோ? நீயாவது உற்றுப்பாரடா.

சோமு: டேய், இது தெரிஞ்சுதான் தாத்தாவதும், அப்பாவதும் சேர்த்து இரண்டு கண்ணுடி கொண்டுவந்திருக்கேன். ஒன்று தூரப்பார்வை, இன்னென்று கிட்டப் பார்வை. நீ ஒண்ணு போட்டுக்கோ, நான் ஒண்ணு போட்டுக்கறேன். எதிலே நன்னுத் தெரியுதுன்னு பார்க்கலாம்.

[எவ்வளவு உறுத்திப் பார்த்தும் தங்கள் பெயரைக் காணுது போகவே இருவரும் ஏமாற்றத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.]

கிட்டு: டேய், இந்த முடிவுக்கா நாம் அவ்வளவு கஷ்டப்பட்டது?

சோமு: நம் முயற்சியெல்லாம் விழலுக்கிறைச்ச நீராகிவிட்டதே!

கிட்டு: டேய், இந்த முடிவை ஏற்கனவே, அதாவது பரீக்ஷை எழுதி முடித்த அன்றே எதிர் பார்த்ததுதான் நான். உன்னலேதான் நான் கெட்டேன். 'ஜென்டில் மேனு'ட்டம் வீட்டிலே உட்கார்ந்திருப்பதை விட்டு, அந்த வாத்தியாருக்கு ஓடி ஓடி உழைச்சோமே, அதுதான் கண்ட பலன்!

சோமு: ஏதோ வாத்தியார் நன்றி வெச்சு ஏதாவது மாற்ற மாட்டாரான்னு நினைச்சேன்...ம் நாமொன்று நினைக்க...

[வாத்தியார் அங்கே வருகிருர் கேட்டுக் கொண்டே]

வாத்: வாத்தியார் ஒன்று நினைத்து விட்டார் இல்லையா? தடியர்களா? வகுப்பிலே ஒருநாள் கூட நுழையாமெ ஊரைச் சுத்திட்டு, இப்போ என் வீட்டிலே நுழைஞ்சா, நான் என்ன செய்றது? இந்த வருஷமாவது ரெகுலரா ஸ்கூலுக்கு வாங்க.

[இருவரும் அசடு வழிய வீடு திரும்புகிருர்கள்.]

இட்லிப் பாட்டி

தமிழ்த்தம்பி

ஒரு சின்னஞ் சிறு குட்டிக் கிராமம். சிறிய கிராமம் என்றாலும் சிங்காரமானது. அதன் பெயர் சிங்காரப்பட்டி. என்ன பொருத்தமான பெயர்!

அதோ...பாருங்கள்! அந்த வட்டமான மண் குடிசை, சிங்காரப்பட்டியின் மையம் நான்தான் என்று கூறிக்கொள்வது போல் இருக்கிறதல்லவா? குடிசையைச் சுற்றிலும் பலவித நறுமணங்கள் கமழும் பூஞ்செடிகள், பூங்கொடிகள். அதன் இடையிடையே பல வித காய்கறிச் செடிகள், கொடிகள் பல உண்டு. இந்தக் குடிசையில் பல்போன ஒரு பாட்டியும், பாட்டியின் உயிருக்கு உயிரான பேத்தியும் மட்டுமே இருந்தனர். பாட்டியின் பேத்தி தாமரை பூப் போல் செக்கச் செவேலென்று பார்க்க அழகாயிருப்பாள். அதனால்தான் அவளுக்குக் கமலம் என்று பெயர் வைத்தார்களோ, என்னவோ, தெரியவில்லை.

இந்தப் பாட்டி அந்தச் சிறு கிராமத்திலுள்ள தம்பி தங்கைகள் எல்லோரிடத்திலும் மிக அன்பாயிருப்பாள். ஏழைத் தம்பி தங்கைகள் என்றால் இன்னும் அதிகமான ஆசை அவளுக்கு. தினமும் பாட்டி தம்பி தங்கைகளுடன் சேர்ந்து கொண்டு விளையாட ஆரம்பித்து விடுவாள், சிறு பிள்ளையைப் போல! ஏன், சிறு பிள்ளையாகவே மாறி விடுவாள்! கண்ணாமூச்சி விளையாடும்பொழுது தம்பி தங்கைகளுக்குக் கண்களைப் பொத்தி விடுவாள். கண் கட்டும் விளையாட்டில் பாட்டியே கண்களைக் கட்டிக் கொண்டு தொட வருவாள்! அப்பொழுது பார்க்க வேண்டுமே! ஒரே வேடிக்கையாக இருக்கும்.

இந்த அன்பே உருவான பாட்டியை, 'இட்லிப் பாட்டி' என்றுதான் எல்லோரும் கூப்பிடுவார்கள். காரணம் இல்லாமல் போகவில்லை. பாட்டி தினந்தவறுமல் இட்லி சுட்டு விற்பாள். சிங்காரப்பட்டியிலேயே இட்லி சுட்டு விற்பவள் இந்த ஒரே ஒரு பாட்டி தான். அதனுலேயே இந்தப் பாட்டிக்கு, 'இட்லிப் பாட்டி! இட்லிப் பாட்டி!' என்று பெயர் வந்துவிட்டது.

"பாட்டி..பாட்டி! எனக்கு ஒரே ஓர் இட்லிதான் பாட்டி! கொடுத்துவிடு, பாட்டி. நான் பள்ளிக்கூடத்துக்கு நடந்தே போக வேண்டும். நேரமாகி விட்டது, பாட்டி!" என்று கெஞ்சுவார்கள், ஏழைத் தம்பிகள்.

"டேய், என்னடா? இப்பொழுது வந்துவிட்டு முதலில் கொடுக்க வேண்டும் என்கிருயே! நான் எப்பொழுது முதல் காத்துக் கொண்டேயிருக்கிறேன்.. பாட்டி! எனக்குத்தான் முதலில் கொடுக்க வேண்டும்" என்று கத்துவான் ஒரு பணக்கார வீட்டுத் தம்பி.

இப்படி இட்லியைச் சுட்டு இறக்குவதற்குள் பாட்டியைச் சூழ்ந்துகொண்டு தம்பி தங்கைகள் எல்லோரும், 'எனக்கு முதலில், உனக்கு முதலில்' என்று கூச்சல் போடுவார்கள், அப்பொழுது பாட்டிதான் சமாதானம் செய்வாள்.

"செம்பா! அவசரப்படாதே. உனக்குத்தான் மொத்தமாகப் பத்து இட்லிகள் வேண்டுமே! ஆனுல் அழகன், கறுப்பன், செழியன் இவர்களுக்கெல்லாம் ஒவ்வோர் இட்லிதானே வேண்டும்? உனக்காகப் பலர் காத்திருக்க வேண்டியிருக்கிறதல்லவா? அதுவுமல்லாமல் அவர்கள் இட்லியைச் சாப்பிட்டுவிட்டு இன்னும் நான்கு மைல்கள் நடந்துதான் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும். நீ வண்டியில்தானே பள்ளிக்குப் போகிருய்! ஆதலால் உனக்குக் கொஞ்சம் நேரமானுலும் பரவாயில்லையல்லவா?" என்று அன்பு பொங்க, பாட்டி தன் பொக்கை வாயைத் திறந்து சொல்வாள். உடனே 'கப்சிப்'பென்று அமைதி பிறந்துவிடும்.

இட்லி சாப்பிடப் பணக்காரத் தம்பி தங்கைகளுக்குக் கேட்டவுடனேயே காசு வந்துவிடும். ஆனால் ஏழைத் தம்பி தங்கைகளோ வீட்டில் கெஞ்சி அழுது கண்ணீர் விட்டு ஓர் அணா வாங்கி வர வெகு நேரம் ஆகிவிடும். இட்லிப் பாட்டிக்கு இதெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவேதான் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அப்படி அப்படியெல்லாம் நடந்து, குழந்தைகளுக்கு ஒருவித இடையூறும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வாள்.

பாட்டி அதிகமான லாபம் கருதாமல் இட்லி சுட்டு விற்றாள். ஒரு நாளைக்கு அவளுக்குக் கிடைப்பதெல்லாம் நான்கணாவோ ஐந்தணாவாகவோதான் இருக்கும்! ஆகா! எவ்வளவு தங்கமான பாட்டி!

* * *

பாட்டியின் பேத்தி கமலாவுக்குத் தன் பாட்டியைத் தவிர வேறு யாரும் கிடையாது. கமலாவை வளர்த்துப் பெரியவளாக்க வேண்டிய பொறுப்பு பாட்டியினுடையதுதான். ஆதலால் இட்லி சுட்டு விற்கும் வருவாயிலேயே தினமும் ஓர் அணாவோ இரண்டணாவோ மீதம் பிடித்து உண்டியலில் போட்டு வந்தாள்.

கமலா வளர வளர பாட்டிக்குக் கவலை அதைவிட அதிகமாக வளர ஆரம்பித்தது. செலவு எல்லாம் அதிகமாக ஆரம்பித்துவிட்டது. ஆதலால் இன்னும் அதிகமாகச் சம்பாதிக்க ஆசை உண்டாயிற்று. 'இனிமேல் இட்லியைக் கொஞ்சம் சிறியதாகத்தான் சுட வேண்டும். இந்தத் தரித்திரப் பையன்களிடமெல்லாம் நாம் அன்பாக இருப்பதால் என்ன பயன்? பணக்காரப் பையன்களிடமாவது பற்றுதல் அதிகமாகக் கொண்டால் அவர்களும் அதிகமாக இட்லி வாங்கிச் சாப்பிட ஆரம்பிப்பார்கள். இட்லி கொஞ்சம் சிறியதாக யிருந்தாலும் கவலைப்படமாட்டார்கள். இதனால் நமக்கு இன்னும் அதிகமான வருவாய் கிடைக்கும்' என்ற எண்ணம் அவளுக்கு உண்டாக ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் அந்த எண்ணம் சிறிது சிறிதாக வளர்ந்து அந்தப் பாட்டியையே மாற்றி விட்டது.

பாட்டிக்கு இப்பொழுதெல்லாம் ஏழைத் தம்பிகளைக் கண்டால் கொஞ்சம்கூடப் பிடிப்பதில்லை. அவர்களையெல்லாம் இழிவாகக் கூட எண்ண ஆரம்பித்து விட்டாள்.

"பாட்டி..பாட்டி! எனக்கு ஒரே ஓர் இட்லி!" என்று கடைசியில் வந்து கேட்பார்கள் சில

தம்பிகள். அவர்களுக்கு முன்னமேயே வந்து எட்டு, பத்து இட்லிகள் என்று கேட்டுக் காத்திருக்கும் தம்பிகளுக்குக் கொடுக்காமல் அவர்களுக்குத் தான் முதலில் கொடுத்தனுப்புவாள், பாட்டி. ஆனால் இப்பொழுது அந்தப் பணக்காரத் தம்பிகளே, "பாட்டி! முதலில் முருகனுக்கு ஒரே ஓர் இட்லி தானே, கொடுத்து அனுப்பிவிடு, பாட்டி! பாவம்! அவன் இந்த இட்லியைச் சாப்பிட்டு விட்டுத் தானே நான்கு மைல் நடந்து பள்ளிக்கூடம் போகவேண்டும். நேரமாகி விட்டது பாட்டி!" என்று மனம் இரங்கிக் கூறுவார்கள். அப்பொழுதுகூட பாட்டி அவர்களுக்குக் கொடுத்தனுப்ப மாட்டாள். "அதைப் பற்றி உனக்கென்னடா? முதலில் நீ வாங்கிக் கொண்டு போ!" என்று கூறும் அளவுக்குக் கொடும் பாட்டியாக மாறிவிட்டாள்.

அன்று ஒரு நாள் கறுப்பன் என்ற தம்பி கால் கடுக்க ஓர் இட்லிக்காகக் கடும் தவம் செய்பவன்போல் நின்று கொண்டிருந்தான். என்ன கெஞ்சியும் பாட்டி கொஞ்சம் கூடக் கவனிக்கவேயில்லை. அவன் கண் கலங்கி விட்டது, பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டதே என்று. ஆனால் பாட்டியோ அப்பொழுதும் தருவதாகயில்லை. பாட்டி பணக்காரத் தம்பிகளுக்குக் கொடுப்பதிலேயே கவனம் செலுத்தினாள்.

கறுப்பன் கெஞ்சியதற்கு, "சீ, நாயே! என்னடா அவசரம், கடைசியில் வந்து விட்டு!" என்று சீறி விழுந்தாள். அப்பொழுது சுட்டு இறக்கிய இட்லியும் தீர்ந்து விட்டது. கடைசியாக இருந்த மாவையெல்லாம் தட்டில் ஊற்றி வேக வைத்தாள், பாட்டி. அது வெந்து இறக்கிய பின்தான் கறுப்பன் ஓர் இட்லியை வாங்கிச் செல்ல வேண்டும். ஆனால் அப்பொழுது கூட ஓர் இட்லி கிடைக்குமா என்று கறுப்பனுக்குச் சந்தேகமாய் போய் விட்டது! அவனுக்கு முன்னமேயே வந்த பணக்காரத் தம்பிகளே இன்னும் காத்திருந்தனர். முதலில் அவர்களுக்குக் கொடுத்துவிட்டுத்தான் கறுப்பனுக்குக் கொடுப்பாள். இதை நினைத்ததும் கறுப்பனுக்கு அழுகை பொங்கி வந்தது. 'கடைசியில் நேரமாகியும் நமக்குக் கிடைக்காது' என்று எண்ணிக் கறுப்பன் திரும்பிச் சென்றான். இதைப் பார்த்தும்கூட பாட்டிக்கு இரக்கம் பிறக்கவில்லை! 'இவன் போனால் இட்லி விற்காதோ?' என்ற மமதையே அவள் மனத்தில் மேலோங்கியிருந்தது.

வீட்டிற்குச் சென்ற கறுப்பன் பழையது இருக்கிறதா என்று பார்த்தான். அவன் பெற்றோர்கள், 'பிள்ளை இட்லி வாங்கிச் சாப்பிட்டு விடுவான்' என்று எண்ணி, இருந்த பழைய சாப்பாட்டை யெல்லாம் சிறிதுகூட இல்லாமல் எடுத்துக்கொண்டு வயலுக்குப் போய்விட்டார்கள்! பள்ளிக்கூடத்திற்கோ நேரமாகி விட்டது. என்ன செய்வான் கறுப்பன்? வெறும் வயிற்றோடு—மிகுந்த பசியோடு—ஓட்டம் ஓட்டமாக ஓடினான் பள்ளிக்கூடத்தை நோக்கி. அப்படியும் பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சேர்வதற்குள், மணி அடித்துப் பாடம்கூடப் பாதிவரை படித்து

விட்டார்கள். பாழும் பட்டினியோடு பதை பதைக்க வந்த கறுப்பனுக்கு, நேரம் கழித்து வந்த காரணத்திற்காக அங்கு முதல்தரமான பிரம்படியும் கிடைத்தது.

அதன் பின் இட்லித் தட்டை இறக்கினாள், பாட்டி. உடனே அங்கிருந்த தம்பிகளுக்கு வேண்டியதைக் கொடுத்தாள். எல்லோரும் வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். ஒருவரும் இல்லை. இனியும் யாராவது இட்லி வாங்க வருவார்கள் என்று எதிர்பார்ப்பதற்குமில்லை. கடைசியாக இட்லித் தட்டைப் பார்த்தாள்பாட்டி. தட்டில் தனியாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்த அந்த ஓர் இட்லி அவளைச் 'சுருக்' கென்று குத்துவதுபோலிருந்தது. பாட்டி அந்த ஓர் இட்லியை விற்பதற்காக வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள். ஒருவரும் வரவில்லை. 'அடடா! கறுப்பனுக்கு இந்த ஓர் இட்லியைக் கொடுத்திருந்தால் மீதமாயிருக்காதே!' என்று அவள் உள் மனம் எண்ணியது.

முன்பெல்லாம் ஒன்றுமே மீதமாகாது. இன்று மட்டும் ஏன் மீதமாகியது? என்றுமில்லாமல் இன்று மட்டும் மீதமாகிவிட்டதால் பாட்டிக்கு ஒருவிதத் திகில் உண்டாகியது. தினமும் இப்படி மீதமாகிவிட்டால் சேர்த்து வைப்பது எங்கே? கமலாவை வளர்ப்பது எப்படி? பாட்டிக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு, 'ம்..ஒரு நாள் ஓர் இட்லி மீதமாகி விட்டால் இப்படி மனம் கலங்கி விடுவதா? அப்படி யெல்லாம் தினமும் மீதமாகாது' என்று தேற்றிக்கொண்டாள்.

மறுநாள் இரண்டு தம்பிகள் ஒவ்வோர் இட்லிக்காக இருந்துவிட்டுக் கறுப்பனைப் போலவே திரும்பிப் போய் அவதிப் பட்டார்கள். அன்று கடைசியில் சுட்டு விற்ற பிறகு இரண்டு இட்லிகள் மீதமாகி விட்டதைப் பார்த்ததும் பாட்டிக்குப் 'பகீரெ'ன்றது! சம்பாதிப்பதை யெல்லாம் சாப்பிட்டு விட்டால் பிறகு என்ன செய்ய முடியும்? இதை எண்ணும்போது தான் அவளுக்குச் சொல்ல வொண்ணாப் பயம் குடிகொள்ள ஆரம்பித்தது.

சிறு துளிதானே பெரு வெள்ளம் ஆகிறது? இவ்விதமே ஒன்று, இரண்டு என்று இட்லிகள் மீதமாகி நஷ்டமாகிக்கொண்டே வந்தது. கடைசியில் ஒருநாள் ஐந்து இட்லிகள் மீதமாயின!

"ஐயையோ! அசலையும் சாப்பிட நேர்ந்து விட்டதே! முதலுக்கே மோசம் வந்துவிட்டதே! தினமும் இப்படி மீதமாகி,

கடைசியில் முதலே முழுகிப் போய்விட்டால் நான் என்ன செய்வேன்?'' என்று பலவாருகப் புலம்பினுள், பாட்டி.

'ஒரு வேளை இட்லி கொடுக்காமல் திரும்பிப் போகச் செய்வதினுல்தான் இப்படி நின்று விடுகிறதோ?' என்ற எண்ணம் அப்பொழுதுதான் அவளுக்கு தோன்றியது. அதன் பின்—அதைத் தொடர்ந்து, அவள் மனத்தில்—நெஞ்சில் ஒரே எண்ணப் போராட்டங்கள் பேயாட்டம் போட்டன. தான் முன்னிருந்த நிலையையும் இப்பொழுது இருந்த நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். அது மலைக்கும் மடுக்கும் உள்ள இடைவெளியென இருப்பது இப்பொழுதுதான் அவள் மனக்கண்ணுக்குத் தெரியவாரம்பித்தது. 'நான் செய்த கொடுமைக்காகத் தெய்வமே தன்னைத் தண்டிக்க இது போல் செய்திருக்கிருர் போலிருக்கிறது' என்று பாட்டி எண்ணினுள்.

''ஐயோ! கணபதி! மமதையால் மதிகெட்டுப் போனேன்! இனியும் என்னைச் சோதிக்காதே! என்னைக் காப்பாற்று!'' என்று தன்னையும் அறியாமல் 'ஓ' வெனக் கூக்குரலிட்டு அலறிவிட்டாள், பாட்டி.

அதன் பின் பாட்டி பழைய இட்லிப் பாட்டியாக மாறியது மட்டுமல்ல; அதைப்போல் இரண்டு மடங்கு நல்ல பாட்டியாகவும் மாறிவிட்டாள்!

* * *

மாலைக் கதிரவன் மேற்கு மலையின் அடியில் மறைய ஆரம்பித்து விட்டான்.

அதோ..பாருங்கள்! பள்ளியிலிருந்து சிறுவர்கள் பாட்டியின் குடிசையை நோக்கிப் படையெடுத்து வருகின்றனர்! குடிசையின் வாசலில் விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிருள், பாட்டி.

''பாட்டி, பாட்டி எங்கள் பாட்டி!
இட்லி பாட்டி. நல்ல பாட்டி!!''

என்று கத்திக் கூச்சல் போட்டுக் கொண்டே பாட்டியைச் சூழ்ந்து கொள்கிருர்கள். சிறிது நேரத்தில், ''ஆய்! ஊய்!'' என்று கும்மாளம் போட்டுக்கொண்டு விளையாட ஆரம்பித்து விடுகிருர்கள். ஆகா! எல்லாவற்றைக் காட்டிலும் அற்புதமாயிருக்கிறது, இட்லிப்பாட்டி பொக்கை வாயினுல் சிரிக்கும் சின்னஞ் சிறு புன்சிரிப்பு!

தாத்தா: ராமாயணத்தின் முடிவில் என்னடா நடந்தது, தெரியுமா?

பேரன்: தெரியும். சுண்டல் விநியோகம் நடந்தது, தாத்தா!

—முத்து.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(G.) 268. கோபிநாதன் C., ரகுநாதன்., சென்னை 18. 269. குருநாதன் K., சேலம். 270. கோபாலரத்னம் A.V., சென்னை. 271. கணேசன் T. V., சென்னை 4. 272. குருமூர்த்தி P., முசிரி. 273. கோவிந்தராஜன் S. K., உடுமலைப்பேட்டை. 274. கணேசன் S., மதுரை. 275. கோபாலன் N., வாசுதேவன் N., சென்னை 17. 276. கோபாலகிருஷ்ணன் T. S., வேலூர். 277. கோபாலன் N., கல்கத்தா 29. 278. கணேஷ் D., கும்பகோணம். 279. கோவிந்தசாமி K., பதுளை, இலங்கை. 280. கோவிந்தராஜன் B., சென்னை 2. 281. கணபதி சுப்பிரமணியம் K., சென்னை. 282. கோவிந்தராஜன் C.N., பாக்யலக்ஷ்மி, C.N., ராதாபாய்., திருச்சி. 283. கணேசானந்தம் M. யாழ்ப்பாணம். 284. கோவிந்தன் C., சென்னை 17. 285. கோவிந்தன் K., சுப்பிரமணியன் K., கிருஷ்ணகிரி. 286. கணபதி K., மதுரை. 287. கணேசன் S., அரியலூர். 288. கோபாலராவ் V., தஞ்சாவூர். 289. கோபால் M., சென்னை 14. 290. கோபு., அம்பி., ராஜு, சென்னை 17. 291. கோமதிநாயகம் V. K., சாத்தூர். 292. கோவிந்தசாமி R., சென்னை 5. 293. குருசாமி S., காளாகுடி. 294. கணபதி N., மாயவரம். 295. கோபால் K., கோயமுத்தூர். 296. குகராஜன் T., ராஜேஸ்வரி T., இலங்கை. 297. கோபாலன் C. P., புதுடில்லி. 298. கஜேந்திரன் N., ராபர்ட்ஸன்பேட்டை. 299. தேவசேனாதிபதி., சென்னை 14. 300. கோபாலன் T. K., சக்ரபாணி, திருப்பத்தூர். 301. கோவிந்தராஜன் G. (விலாசம் எழுதவில்லை). 302. கங்காதரன் A., தஞ்சாவூர் 303. கோபலன் K., சென்னை 7. 304. கோவிந்தன் K., (விலாசம் இல்லை). 305. கௌரி V., கோயில்பட்டி. 306. கங்காதரன் T., மீனாம்பிகை T., கண்டி. 307. கோமதி P. N., கல்கத்தா. 308. கோமஸ் T., குருநாகல்., இலங்கை. 309. கோபாலன் S.,

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

ஜூலை, 15-'54 கூபன் செ:

டாலமியாபுரம். 310. குணபாலன் A. K., யாழ்ப்பாணம், இலங்கை, 311. கோபாலரத்னம் K. P., சென்னை 4. 312. கௌரி M., திருமங்கலம். 313. கோமதி P. N., கல்கத்தா 29. 314. கோவிந்தன் R. M., இராயவரம். 315. கோபால் M., கல்லல். 316. கணேசரத்தினம்; S., பருத்தித்துறை. 317. கோபாலன் S., ஜீயபுரம். 318. கோபாலகிருஷ்ணன் C. V., கோயமுத்தூர். 319. கணேசபிள்ளை A. யாழ்ப்பாணம், இலங்கை. 320. கணபதி P. S., பாளையங்கோட்டை. 321. கௌரி M., திருமங்கலம். 322. ஞானசேகர ஐயர் T., சுன்னுகம், இலங்கை. 323. கோபாலன் S., களக்காடு. 324. ஜார்ஜ் ஜோஸப் தனராஜ்., பாளையங்கோட்டை. 325. கோவிந்தராஜு., திருச்சி. 326. குணசேகரன் V., சென்னை 14. 327. கணபதிசுப்பிரமணியம் V., மதுரை. 328. ஞானசம்பந்தம் S., கோயமுத்தூர். 329. கோபாலகிருஷ்ணன் S., திருவிடமருதூர். 330. கோவிந்தராஜன் M. N., முராரி M. N., பத்மா, சென்னை 4. 331. கணேசன் K. P., பம்பாய். 332. கணேசன் R. S., புதுக்கோட்டை. 333. கோபால் S. V., S. S. N. ராஜன், லால்குடி. 334. கோபாலன் V., விழுப்புரம். 335. கோபாலன் C., பதுளை, இலங்கை. 336. கணபதி சுப்பிரமணியன் N, திண்டிவனம். 337. கோமதி M., தென்காசி. 338. கோபிநாதன் C., கோயமுத்தூர். 339. கோபாலன் R., பம்பாய் 19. 340. கோபாலன் K., நாமக்கல். 341. கோபாலகிருஷ்ணன் R., சென்னை 17. 342. கணேசன் S., தேவகோட்டை. 343. கோவிந்தசாமி S., கீழ்பின்னத்தூர். 344. கோபாலகிருஷ்ணன் V., சாரம். 345. கணேசன் V., தேனி. 346. கணேசன்., மைலாடி. 347. கணபதி K., சென்னை 4. 348. குணசேகரன் V., வைத்தீஸ்வரன் கோவில். 349. கணேசன் R., பழனி. 450. கோபாலகிருஷ்ண பிள்ளை., திருவனந்தபுரம். 351. கோவிந்தன் O. N., கோயமுத்தூர். 352. ஞானசேகரன் P. S., சண்டிலிபே. 353. ஞானபண்டிதன்., பழனி. 354. கோவிந்தராஜு M., தண்ணீர்பந்தல்பாளையம். 355. குருசாமி A., தென்மரப்பட்டு.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்
கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★★

தம்பீ, கேள்!

க. சண்முகசுந்தரம்

எனதருமைத் தம்பீ!

முன்பு ஒரு முறை தமிழ் மறையாகிய திருக்குறளுக்கு உதாரணம் காட்டக்கூடிய ஒரு வேடிக்கையான வாழ்க்கைச் சம்பவத்தை எழுதியிருந்தேன். நான் கேட்டுக் கொண்டபடி அந்தக் குறட்பாவை மனப்பாடம் செய்திருப்பாய் எனவும் நம்புகிறேன். இப்பொழுது மற்றொரு சம்பவத்தைக் கூறுகிறேன்.

தெருவிலே நடந்து போய்க் கொண்டிருந்தேன். ஒலிபெருக்கி மூலமாக, "காலேஜ் படிப்பும் பயனில்லை ...... யோசித்து நன்றாய் உணரணும் - உலக அனுபவம் உண்டாகணும் — டடடா, டடடா, டடட டா" என்ற இசைத்தட்டின் ஒலி, சில வருடங்களுக்கு முன் நடை பெற்ற சம்பவம் ஒன்றை என் நினைவுக்குக் கொண்டு வந்தது.

என் வீட்டிற்கு அடுத்த வீட்டில் கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் தனது தாயாருடன் வாசித்து வந்தான்.

ஒரு நாள் காலே 11 மணிக்கு எனது அலுவலாக வேலையை முடித்துக்கொண்டு வீடு திரும்பினேன். அடுத்த வீட்டில் அழுகையும் கூச்சலும் ஏக ரகளையாயிருந்தன. "பாவம்! யாருக்கு என்ன ஆபத்தோ?" என மனம் கலங்கி விசாரித்து வரலாமென அவர்கள் வீட்டில் நுழைந்தேன். என்னைப் பார்த்ததும் அக்கல்லூரி மாணவன், "எங்களைத் தவிக்க விட்டு விட்டு எங்க மாமா போயிட்டாங்களே, அண்ணு!" என்று கூச்சலிட்டு அழத் தொடங்கினன். அவன் என்னை எப்பொழுதும் "அண்ணு" என்றே அழைப்பது வழக்கம். பாவம்! அவனது தகப்பனர் காலம் சென்ற பின் அவனுடைய தாய்மாமன் உதவியால்தான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு உதவி செய்யக் கூடிய உற்றார் உறவினர் வேறு யாரும் இல்லை. மாதமாதம் மணியார்டர் மூலம் அவனுடைய மாமா அனுப்பிவந்த தொகையைக் கொண்டுதான் சிக்கனமாக அவனும், அவனுடைய தாயாரும் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார்கள். உலகத்தில் தங்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரே ஆத்மாவையும் பறிகொடுத்து விட்டால், எவ்வாறு இருக்கும்? எனக்கும் அச்செய்தி மிகுந்த வருத்தத்தை அளித்தது. ஆனல் ஒரு சிறு சந்தேகமும் எழுந்தது. வெளியூரில் வசித்து வந்த அவனுடைய மாமா இறந்துபோன செய்தி எவ்வாறு வந்திருக்கும்? தந்தி வந்ததாகத் தெரியவில்லையே? காலை முதல் நான் மட்டும்தானே தந்தி பிராஞ்சில் வேலை செய்திருக்கிறேன்? அவ்வாறிருக்க என்னையறியாமல் அவர்கள் வீட்டிற்குத் தந்தி எவ்வாறு வரமுடியும்?

உடன் பிறந்த சகோதரிக்குத் தந்திகொடுக்காமல் சாவகாசமாக, சாதாரணக் கடிதவாயிலாகவா இறந்த செய்தியைத் தெரிவித்திருப்பார்கள்! எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

"தம்பீ! உன் மாமா இறந்து போனதாகச் செய்தி எப்படிக் கிடைத்தது?" என விசாரித்தேன். பக்கத்திலிருந்த கடிதத்தைச் சுட்டிக் காண்பித்தான். "டெட் லெட்டர் ஆபீஸ்" என்று தலைப்பில் அச்சடிக்கப்பட்டு, கீழே அம்மாணவனுடைய விலாசம் எழுதப்பட்ட கடிதம் பிரிக்கப்படாமல் இருந்ததைக்கண்டு ஆச்சரியமடைந்தேன். "இந்தக் கடிதம்தானா?" என வியப்புடன் கேட்டதற்கு, "ஆமாம்" என்று தலையசைத்தான். கடிதத்தின் உறையைக் கிழித்து இறந்து போனதாகக் கருதிய அவனுடைய மாமா கைப்பட எழுதியிருந்த கடிதத்தை வெளியே எடுத்துக் கொடுத்து, "நன்றாகப் பிரித்து வாசித்துப் பார்! முதலில் உனது தாயாரை அழுகையை நிறுத்தச் சொல்" என அன்புடன் கட்டளையிட்டேன்.

நடந்த விஷயம் இதுதான். அவன் மாமா உடல் நலக் குறைவாயிருப்பதாக, அவர்கள் ஊரிலிருந்து வந்த ஒருவர் கூறினாராம். சில நாட்களாக அவ்விடமிருந்து கடிதங்களும் இல்லை. திடீரென "டெட் லெட்டர் ஆபீஸ்" என்று அச்சடிக்கப்பட்ட இந்தக் கவர் வந்து சேர்ந்தது. "டெட் லெட்டர் ஆபீஸ்" என்றால் என்ன என்பது பையனுக்குத் தெரியாது. டெட் லெட்டர்—செத்த கடிதம்" என்று அர்த்தம் செய்து கொண்டான் இந்த பிருகஸ்பதி. கடிதத்தைப் பிரித்துக் கூடப் பாராமல், "ஐயையோ! மாமா போயிட்டாங்களே!" என்று அலறத் தொடங்கினான். கல்லூரியில் படிக்கும் மாணவனே அவசரப்பட்டுக் கொண்டு அலறத் தொடங்கும் பொழுது பெண்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்! அவனுடைய தாயாரும் தனது ஒப்பாரியைத் தொடங்கி விட்டாள். நல்ல வேளையாக அடுத்த ரெயில் வருவதற்கு மூன்று மணி நேரம் இருந்தபடியால் உடனே புறப்பட்டுச் செல்லவில்லை.

அவனுடைய மாமா அவசரத்தில் விலாசமே எழுதாமல் கவரைத் தபாற்பெட்டியில் போட்டுவிட்டார். மேலே விலாசம் ஒன்றுமில்லாததால், அக்கடிதம், அதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள "டெட் லெட்டர் ஆபீசிற்கு" அனுப்பட்டது. அங்கு அதைப் பிரித்துப் பார்த்தார்கள். நல்ல வேளையாக இம் மாணவனுடைய விலாசம் உள்ளே எழுதப்பட்டிருப்பது கண்டு, அந்த விலாசத்தை, "டெட் லெட்டர் ஆபீஸ்" என்று அச்சடிக்கப் பட்ட தங்கள் ஆபீஸ் கவரில் எழுதித் தபாலில் அனுப்பி விட்டார்கள். "டெட் லெட்டர்" என்றால் செத்த கடிதம் என்று அர்த்தம் செய்து கொள்வார்கள் என்று தபால் தந்தி இலாகாவினர் கண்டார்களா!

ஒலி பெருக்கியில் கேட்ட "டடடா" பாட்டில் வரும் "காலேஜ் படிப்பும் பயனில்லை" என்ற பகுதி உண்மையாகி விட்டது, பார்த்தாயா! யோசித்து நன்றாய் உணரணும், உலக அநுபவம் உண்டாகணும் என்பதில் எவ்வ

ளவு உண்மை பொதிந்திருக்கிறது! உனக்கு உலக அநுபவம் உண்டாக வேண்டும் என்பதற்காகவே, இது போன்ற செய்திகளை உனக்கு எழுதுகிறேன், நன்றாகக் கவனித்துக் கொள்.

கார்டோ, கவரோ எது எழுதத் தொடங்கினாலும், யாருக்கு எழுதுகிறாயோ அவர்களுடைய விலாசத்தைத் தெளிவாக முதலில் எழுதிவிட்டுப் பின்னர் கடிதம் எழுதத் தொடங்கு. கார்டில் விலாசம் மட்டும் எழுதி, சமாசாரம் ஒன்றும் எழுதாமல் தபாற் பெட்டியில் போட்டுவிட்டாலும் பரவாயில்லை. விலாசம் எழுத மட்டும் மறந்து விடாதே! விலாசம் எழுதும் முறையையும் நன்றாகத் தெரிந்து கொள். சிலர் "மதுரை ஜில்லா, பெரிய குளம் தாலுகா, கோம்பை போஸ்டைச் சேர்ந்த பல்லவ ராயன்பட்டி கிராமம், சுப்பையா கவுடர் மகன் சுந்தரக் கவுடர் கையில் கொடுப்பது" என்று தவறான முறையில் விலாசம் எழுதுகிறார்கள். விலாசம் எழுதும் முறை அதுவல்ல.

"சுந்தரக் கவுடர்,
சுப்பையாக் கவுடர் மகன்,
பல்லவராயன்பட்டிக்
கிராமம்,

கோம்பை அஞ்சல் *
KOMBAI P. O.
மதுரை ஜில்லா."

என்பதே சரியான முறை. தபாலாபீஸ் பெயரைக் கொட்டை எழுததுக்களில் எழுதி, கீழே ஒரு கோடு

இடுதல் நலம். இயலுமாயின் தபாலாபீஸ் பெயரை ஆங்கிலத்திலும் எழுது. நீ ஆங்கிலத்தில் எழுதாவிட்டாலும் தபாலாபீசில் அந்த வேலையைச் செய்து கொள்வார்கள். சென்னை, மதுரை, திருவனந்தபுரம், பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களில் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு நம்பர் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக "மயிலாப்பூர், சென்னை-4." என்று குறிப்பிடப்படும், அந்த நம்பரையும் குறிப்பிட்டு எழுதினால், கடிதம் கால தாமதமில்லாமல் போய்ச் சேரும்.

விலாசம் சரியாக எழுதாவிட்டாலோ, விலாசமே எழுதப்படாவிட்டாலோ, உனது கடிதம் "டெட் லெட்டர் ஆபீசிற்கு" யாத்திரை செல்ல நேரிடும். டெட் லெட்டர் ஆபீஸ் என்றால் என்ன என்பது இப்பொழுது புரிகிறதா? அந்த ஆபீசில் எல்லா மொழிகளும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். தமிழ் தெரியாத பகுதிக்கு, மேல் விலாசம் தமிழில் மட்டும் எழுதியனுப்பினால் அக்கடிதம் முதலில் டெட் லெட்டர் ஆபீசிற்குச் செல்லும். அங்கு எழுதிய மேல் விலாசத்தை மொழிபெயர்த்து, உரிய இடத்திற்கு அனுப்பிவைப்பார்கள். அனுப்பு விலாசத்தையும் ஒரு மூலையில் எழுதும் வழக்கத்தை எப்பொழுதும் கைக்கொள். விலாசதாரருக்குக் கிடைக்காவிட்டால் உனக்காவது ஒழுங்காகத் திரும்பிவருமல்லவா?

பள்ளிப் படிப்பளவுடன் நில்லாது இது போன்ற செய்திகளையும் அறிந்து உனது அறிவை வளரச் செய்துகொள். நல்ல செய்திகளைப்பற்றிய கருத்துக்களைத் தனியாக ஒரு நோட்டில் குறிப்பு எடுத்துக்கொள். உனது வாழ்க்கையில் அந்தக் குறிப்புகள் பெரிதும் பயன்படும். இதுவரை குறிப்பு நோட்டு போடாதிருந்தால், இன்றே குறிப்பு நோட்டுத் தயாரித்து, முதலில் சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்த, "காலத்தினால் செய்த நன்றி" குறட்பாவைக் குறித்து வைத்துக் கொள். "டெட் லெட்டர் ஆபீசை"ப் பற்றிய குறிப்பும் எழுதி வைத்துக்கொள்.

முதல் பட்டிக்காட்டான்: என்ன அண்ணே, பட்டணம் போயிருந்தாயே, என்ன பாத்தே?

இரண்டாம் ஆசாமி: ஓரணா கொடுத்து என் எடையைப் பார்த்தேன்!

முதல் பட்டிக்காட்டான்: அப்படியா! என் எடையையும் பார்த்து வரக்கூடாதா, அண்ணே! வந்தா ஓரணா கொடுக்கமாட்டேன்னு நினைச்சியா?

—ம. கோ. ப.

சந்திரகிரிக் கோட்டை

"ஜனு"

சிம்மக்கோட்டை, புலிக் கோட்டையைவிடப் பெரிதாகவும் அழகாகவும் அமைந்திருந்தது. அதன் இயற்கை அமைப்பே அதற்குச் சிறப்பைத் தந்தது. கீழ்புறம் அலையெறியும் விரிகடல்; மற்ற மூன்று புறத்திலும் உப்பங்கழியே அகழியாகச் சுற்றியிருந்தது. சுவர்கள் எல்லாம் பாறைகளால் கட்டப்பட்டவை. புராதனமான அந்தக் கோட்டைக்குள்ளே ஒரே சமயத்தில் பதினாயிரம் வீரர்கள் போல் தங்கியிருந்து போர் செய்யக்கூடிய வசதிகள் இருந்தன. ஏராளமான ரகசிய வழிகளும் சுரங்கங்களும் அதில் இருந்தன என்று எல்லாரும் சொல்லி வந்தார்கள்.

அரச குடும்பத்தினர் தவிர மற்றவர்களுக்கு அதன் உள் அமைப்பும் அக்குள்ள ரகசியப் பாதைகளும் தெரியவரா. காவலாளிகளுக்குக்கூட ஓரோர் இடங்கள்தாம் தெரியுமேயல்லாது எல்லா இடங்களும் தெரியாது.

சிம்மக்கோட்டையை ஆண்டு வந்த பாளையக்காரர்களாலேயே அது முந்நூறு ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதாம். ஆயினும் அந்தக் கோட்டை சமீப காலத்தில் நிர்மாணித்தது போல அத்தனை புதிதாகவும் உறுதியாகவும் இருந்தது. அதன் வெளித்தோற்றமே எதிரிகளைப் பிரமிக்கச் செய்துவிடும்; பார்ப்பவர்கள் பயந்து ஒடுங்கிப் பெருமூச்செறிவார்கள். எத்தனையோ போர்கள் விளைந்து அந்தக் கோட்டை தாக்குப் பிடித்துச் சமாளித்திருக்கிறது. சுருங்கச் சொன்னால் எதிரிப் படையினருக்கு அந்தக் கோட்டையின் பெயரே சிம்ம சொப்பனமாக இருந்தது என்னலாம். அதனாலேயே சிம்மக்கோட்டை என்ற பெயர் வந்ததோ என்றுகூட நாம் யூகிக்கலாம்.

இந்தப் பழம் பெரும் கோட்

டையின் வாயிலே புதுமையாக இருந்தது. பெரிய சிம்மம் ஒன்றின் வயிறே அதன் ஆசார வாசல். ஆவென்று அந்தப் பிரம்மாண்டமான சிம்மம் முன்னங்கால் இரண்டையும் ஊன்றிக்கொண்டு உட்கார்ந்திருப்பதுபோல் இருக்கும். கோட்டையினுள்ளே இருந்த ஒவ்வொரு மண்டபமும் சிம்ம வாயிலைக்கொண்டதுதான். அரண்மனையின் முகப்பே சிம்ம உருவத்தில் கட்டப்பட்டிருந்தது. சிம்மக் கேணி, சிம்மக் குகை, சிம்மப் பாசறை என்று எல்லாம் சிம்ம மயமாகவே இருந்தன.



சிம்மக்கோட்டையை ஆண்ட பாளையக்காரரை அனைவரும் சிம்மராஜா என்றே அழைப்பார்கள். சந்திரகிரிக் கோட்டை அரசனுக்கு இந்தச் சிம்மராஜாவிடம் அளவிறந்த அன்பும் மதிப்பும் உண்டு. சிம்மராஜாவும் ராஜபக்தியில் சளைத்தவரல்ல. இரட்டையர்களுடைய வரவை அவர் எதிர்பார்த்திருந்தார்.

புலிக்கோட்டையிலிருந்து இரட்டையர்கள் வருமுன்பாகவே ஒற்றர்கள் வந்து அமலனுடைய வெற்றிபற்றிக் கூறிவிட்டார்கள். சிம்மராஜா தம் கோட்டையில் நடைபெற வேண்டிய போட்டிகளைப் பற்றித் தீர்மானித்து வைத்து விட்டார். மந்திரிப் பிரதானியர்கள் அந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளையும் ஒழுங்குமுறைகளையும் செய்து வந்தார்கள். வரும் இளவரசர்களை ராஜமரியாதையுடன் வரவேற்கவேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றன.

சிம்மக்கோட்டையைக் கடந்து நகருக்குள் செல்லும் வீதிகள் எல்லாம் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இளவரசர்கள் வருகின்ற ராஜ வீதிகளில் தண்ணீர் தெளித்து, புள்ளிக் கோலங்கள் போட்டிருந்தார்கள். எங்கே திரும்பினாலும், 'வருக, வருக' என்ற வரவேற்பு வளைவுகள் காணப்பட்டன. ராஜக்கிருகங்கள் எல்லாம் விசேஷமாகத் தீபாலங்காரங்கள் செய்யப்பட்டு இந்திரலோகமோ, குபேரப்பட்டணமோ என்று மலைக்கும்படி இருந்தன. நகர மாந்தர்கள் அனைவரும் குதூகலத்துடன் இருந்தார்கள். வஸந்த உற்சவம் வந்துவிட்டதுபோல நகரப் பெண்டிரும் சிறுவர் சிறுமியரும் கோலாகலத்துடனிருந்தார்கள்.

"வருகிறார்கள், வந்துகொண்டிருக்கிறார்கள், வந்துவிட்டார்கள்!" என்ற செய்திகள் கோட்டை வாயிலிலிருந்து நகருக்குள் அலைபோல் பரவிக்கொண்டேயிருந்தன. கோட்டையின் மீது வீரர்கள் அணி வகுத்து நின்றார்கள்; கொத்தளங்கள் மீது அணிவகுத்து வரிசை வரிசையாக நின்றார்கள். சிம்மக்கோட்டையே வழி மேல் விழி வைத்து வாயைத் திறந்தபடி காத்துக்கொண்டிருந்தது. சிம்மராஜாவின் மூத்த புதல்வனான இளவரசன் தம்பி ராஜா கோட்டை வாயிலிலேயே காத்திருந்தான்.

இங்கே இவ்வளவும் நடக்கும்போது அமலனும் விமலனும் எவ்விதம் வந்துகொண்டிருந்தார்கள் என்பது தெரியவேண்டாமா? மூன்று நாட்கள் பிரயாணத்தினால் கூட அவர்கள் களைப்படையவில்லை. மிகுந்த உற்சாகத்துடனேயே இருந்தார்கள். ஆயினும் சகோதரர்கள் இருவரும் இரண்டு வைரிகள் சேர்ந்து வருவது போலவே இருந்தார்கள். சகோதரர்கள் என்ற பாசமே அவர்களுக்குள் அறுந்துவிட்டது. சமயம் நேர்ந்தால் ஒருவனை ஒருவன் மறு உலகம் அனுப்புகிற அளவுக்குக்கூடத் தயாராக இருந்

தான் என்று சொல்லலாம். புலிக் கோட்டை பாளையக்காரர் முன் யோசனையுடன் அவர்களுக்குக் காவலாகவும் துணையாகவும் ஒரு சிறு படையை மட்டும் அனுப்பாமல் போயிருந்தால் என்ன ஆகியிருக்குமோ, என்னவோ! நிச்சயம் அவர்களில் யாராவது ஒருவன் ஒழிக்கப்பட்டிருப்பான். நெஞ்சில் அத்தனை வைரமும், செயலில் அத்தனை கொரேமும் அவர்களிடத்திலே காணப்பட்டன.

ஒரோரு சமயம் மிகவும் ஒற்றுமையுடனிருந்த தங்களைப் பிரிக்கவே தெய்வம் இத்தகைய சோதனையை ஏற்படுத்தியதோ என்று கூட அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அடுத்த கணமே, தனக்காக மற்றவன் விட்டுக் கொடுக்கிறானா இல்லையா என்று பார்க்கவே தெய்வம் இத்தகைய சோதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் தோன்றியது. பெரியவர்களாகி, நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டு, அதன் பிறகு சண்டை என்று ஏற்படுவதைவிட இப்போதே பிரிந்து ஒருவனை ஒருவன் அறிந்து கொள்வது நல்லதல்லவா! அதற்காகவே இந்தப் போட்டி வந்து முளைத்திருக்கிறது என்று தோன்றியது. எப்படிப் பார்த்தாலும், 'எல்லாம் நன்மைக்கே' என்ற முதுமொழிப்படியே யாவும் நடப்பதாக அவர்கள் கருதினார்கள்.

இளவரசி இந்துமதி, சந்திரகிரிப் பட்டத்து முடிமகுடம் இரண்டும் கிடைப்பதற்காக எதை வேண்டுமானாலும் சாதித்து முடிக்க அவர்கள் இப்போது தயாராக இருந்தார்கள்.

அவர்கள் மூன்றும் நாள் மாலையில் சிம்மக்கோட்டையை அடையும்போது, "நானே வெல்வேன்!", "நானே வெல்வேன்!" என்பது போல மார்பைப் புடைத்துக் கொண்டு வெகு கம்பீரமாகக் காட்சியளித்தார்கள்.

மாலை வெயில் தகதகவென்று கோட்டை கொத்தளங்களுக்கும் மகர தோரணங்களுக்கும் நாலுவித சேனைகளுக்கும் பொன்னொளி பூசிக்கொண்டிருந்தது. எல்லாம் பொன்மயமாக மின்னின. கோட்டை வாயிலை அவர்கள் நெருங்கியதுமே, "பூம்.. பூம்.. பூம்" என்று கொம்புகள் ஊதின. 'கணகண கண'வென்று தாளமும், 'தட தட தட'வென நகராவும் முழக்கம் செய்தன. 'இளவரசர்கள் வாழி! இரட்டையர்கள் வாழி!' என்ற வாழ்த்தொலிகள் கிளம்பின. கொத்தளத்திலிருந்த வீரர்கள் உயர இருந்தபடியே மரியாதை வணக்கத்தைக் காட்ட வில்லையும் அம்பையும் நாணேற்றுவதுபோல் நின்றார்கள். நாண் கயிற்றின் ஜங்காரம் வானமண்டலத்தையே நிரப்பியது. அம்புகள் 'நொய்' யென்று விண்ணில் பறந்து சென்றன. இரட்டையர்கள் இந்த மகத்தான விமரிசைகளைக் கண்டு மலைத்தே போய்விட்டார்கள். இருவருடைய முகமும் அகங்காரத்தால் சிவந்துவிட்டன.

தம்பி ராஜா முன் நின்று வரவேற்று மண்டியிட்டு வணங்கினான். "சிம்மராஜா தங்கள் மேலான வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். தங்கள் வரவு நல்வரவாகுக!" என்று கூறினான்.

அவர்கள் சதுரங்க சேனைகளுடன் பவனி வந்து பட்டணப் பிரவேசம் செய்த காட்சியை வர்ணிக்க யாரால் முடியும்?

பாவாணர்களும் இசைவாணர்களும் இன்னிசைப் பாடல்கள் பாடி வந்தார்கள். அந்தணர்கள் வேத கோஷம் செய்து வந்தார்கள். நகர மாந்தர்கள் மங்கள ஆரத்தி எடுத்தார்கள்; "வாழி! வாழி!" என்று வானளாவ வாழ்த்தினர்கள்.

சிம்மராஜா நகர சபா மண்டபத்திலிருந்து இறங்கி வந்து அவர்களை மார்புறத் தழுவி வரவேற்ற வைபவம் மனத்தைக் கவர்வதாக இருந்தது.

"இளவரசர்காள்! தங்களை இந்தக் கோட்டையின் பெருங்குடி மக்கள் சார்பாகவும் எங்கள் குலத்தின் சார்பாகவும் வரவேற்கிறேன். சோதனை மிக்க போட்டிகளில் நீங்கள் கலந்துகொண்டு உங்கள் நாட்டுப் பெருமையை எங்களுக்கு உணர்த்த வேண்டுகிறேன். வருக..வருக.." என்று முகமன் கூறினர்.

மறுநாள் நகர மன்றத்தில் முதல் போட்டியாகிய வாள்போர் நடைபெறும் என்று பறைசாற்றுவிக்கப்பட்டது.

வட்ட வடிவமான பெரிய மன்றத்தில் சிங்கமும் பொலிகாளைகளும் உறுமிப் போர் புரிந்து, ரத்தத்தைச் சிந்தியிருக்கின்றன. மல்லர்கள் சமர் புரிந்து மக்களை மகிழ்வித்திருக்கிறார்கள். வீரர்கள் தம் வீரத்தை விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். அந்த வட்ட மைதானத்திலேயே இந்த வாள் போரும் நடக்க ஏற்பாடாகியிருந்தது. காலையிலிருந்தே மக்கள் அலை வரும் சாரி சாரியாக வந்து மைதானத்தைச் சுற்றியுள்ள படிக்கட்டுகளில் வந்து குழுமிய வண்ணமாக இருந்தனர். ராஜ கன்னிகைகளின் மாடங்கள் எல்லாம் பட்டுத் துணிகள் தொங்கிய வண்ணம் இருந்தன. கிரேக்க சாம்ராஜ்யத்துப் பாணியை வெல்லும்படி அந்த மன்றத்தைச் சிருஷ்டித்து நிர்மாணித்திருந்த சிற்பியின் திறமை சோழ நாட்டின் பெருமையைப் புலப்படுத்திக் கொண்டிருந்தது.

சரியாகப் பத்து நாழிகைக்குப் போட்டி ஆரம்பமாக இருந்தது. ராஜ விருதுகளும் மெய்காவலர்களும் மேடையை அடைந்தார்கள். சிம்மராஜா இரட்டையர்களின் இரு தோளையும் பற்றிக்கொண்டு மேடைமீது காட்சியளித்தார். கரகோஷமும் உற்சாகக் கூவலும் அலைகடல்போல் பொங்கி எழுந்தன. கட்டியக்காரர்கள் எழுந்தார்கள். மேடையைச் சுற்றிலும் ஆங்காங்கே வட்டமாக நின்றபடி மக்களுக்கு நிகழப்போகும் செய்திகள் அறிவிக்கப்பட்டன.

நடுவில் இருந்த இரும்புக் கூண்டிலிருந்து ஒரு சிங்கம் கோரமான கர்ஜனையோடு வெளிப்பட்டுப் பாய்ந்து பாய்ந்து நடுவட்டத்துக்குள் உலாவியது. மக்கள் கதிகலங்கினர். சிறுவர்கள் நடு நடுங்கினர். பெண்மணிகள் கூக்குரல் இட்டுக் கலங்கினர்கள். காலை வெயிலில் பளபளக்கும் வைரம் பொதித்த வாட்களுடன் சகோதரர்கள் இருவரும் சிவப்புப் பட்டுக் கச்சு அணிந்து நடு வட்டத்துக்குள் முறுக்கேறிய இளங்காளைகள் போல் நுழைந்தனர்.

சிங்கம் வாயைப் பிளந்து அவர்களை ஒரே விழுங்காக விழுங்கத் தயாராக இருப்பதுபோல் கர்ஜித்துக்கொண்டு நின்றது.

(தொடரும்)

ஏன் அப்படிச் சொல்கிறாய்? எனக்குத் தாகம் பொறுக்க முடியவில்லையே!
என்னைக் காரணம் கேட்காதே!
பாலகன் பலவாறு கெஞ்சியும் தங்கப் பறவை எதுவும் கூற மறுக்கவே....
உன்னை நான் வெட்டி வீழ்த்தி விடுவேன்!
ஹா...ஹா...
ஆவது ஆகட்டும். நான் தண்ணீர் குடிக்கத்தான் போகிறேன்..
ஏ, மூடா! இந்தத் தண்ணீரைக் குடித்தால் நீ கல்லாகி விடுவாய்!
ஹா! ஐயோ!
என்ன ஆனாலும் தண்ணீரைக் குடிக்காதே!
தொடரும்.

(தொடரும்)

எங்கள் பகுதி

[இந்த இதழில் போதிய இடமில்லாததால் அதிகக் கடிதங்கள் வெளியிட முடியவில்லை. ஆ-ர்.]

*எங்கள் பகுதி

15-6-'54 கண்ணனை நான் விமரிசனம் செய்வதற்கு முன் 'எங்கள் பகுதி'யை விமரிசனம் செய்யப் போகிறேன்.

எங்கள் பகுதி நல்ல பகுதிதான். அதன் நோக்கம் என்ன? எனக்குத் தெரிந்தவரையில் சொல்கிறேன். வரும் கதைகள் எப்படியிருக்கின்றன, வரவேண்டிய விஷயங்கள் எப்படியிருக்கவேண்டும் என்பதைப் பார்ப்பதுதான் அதன் நோக்கம். சரிதானா?

'அது மோசம், இது பேஷ், அது காப்பி, இது சொந்தம்' என்று போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போகிறார்கள் என் சகோதர சகோதரிகள். இப்படிப் பார்ப்பதால் நல்ல விஷயங்களை ஆராய்ந்து பார்க்கும் பயிற்சியும் ருசியும் நமக்கு உண்டாகுமா? உண்டாகாது. சிறந்ததை எதனால் சிறந்தது என்று முதலில் நாம் தெரிந்து அதை மற்றவருக்குச் சொல்ல வேண்டும். அதனால் நமக்கு மன வளர்ச்சி உண்டாகிறது. கதையின் ஆசிரியருக்கும் உற்சாகம் உண்டாகிறது. மோசமாக இருந்தால் இந்த அம்சம் சரியாகப் படவில்லை என்று எழுதலாம். அந்த அம்சத்தைப் பிறரும் தெரிந்து கொள்வார்கள்; அதை எழுதியவரும் உணர்ந்து திருத்திக் கொள்வார். விமசனத்தின் பயன் இதுவே. ஆசிரியருக்கும் இது பயன்படும்.

வழக்கம்போல் கண்ணன் இன்பம் தருகிறது என்பதே என் விமரிசனம். கவிதைக்கு அதிக இடம் கொடுங்கள் என்பதே என் கோரிக்கை.

—ஜே. சாகேதன், குயப்பேட்டை.

அறிவுக்கு விருந்து

'கண்ணன்' அட்டைப்படம் கருத்துள்ளதாக அமைந்திருப்பினும், அதில் கவர்ச்சியில்லை.

'சந்திரகிரிக் கோட்டை' பிரமாதம். (வேறு வார்த்தை அகப்படவில்லையே!) இதற்குச் சித்திரம்

* பரிசு பெற்ற கடிதம்

வரையும் ஓவியருக்கும் எங்கள் நன்றியும், பாராட்டுதல்களும் உண்டு.

'கதை தந்த பரிசு' என்ற கதையில் புதுமையோ, மெருகோ இல்லையே! 'எத்தனும் எத்தனும்' என்ற புதுமையான தலைப்பில் இரண்டு எத்தர்களை அறிமுகம் செய்து வைக்கும் முறை மோசம். மேலும், பலமுறை கேட்டு அலுத்துப்போன கதைதானே அது?

'மூன்று கேள்விகள்' yes, No, Alright, என்ற கதைபோலிருக்கிறது. விமரிசனம் செய்யும் நோக்குடன் ஆராய்ந்தால் அதில் பல குற்றங்கள் கண்டு பிடிக்கலாம்.

'மயில்கண் வேஷ்டி' சுமார்.

'ராஜன்' அவர்களின் கதை இவ்விதழ்க் 'கண்ண'னை அழகு செய்கிறது.

இவ்விதழில் சந்திரகிரிக் கோட்டையும் இரும்புமனிதனுமே நன்றாயுள்ளன.

எஸ். பேபி தன் கடிதத்தில் கூறியிருக்கும் யோசனை, எங்கள் கருத்தையே பிரதிபலிக்கிறது.

—தே. பார்த்தசாரதி,
சென்னை - 4.

கலைப் பொக்கிஷம்

15-6-54 கண்ணன் அட்டைப் படம் பார்க்க மிகவும் நன்றாகவிருக்கிறது. அட்டைப் படங்கள் அந்தந்த இதழின் கதைகளில் வரும் சம்பவங்களைச் சித்திரிப்பதாக இருக்கவேண்டும் என்பது என் அவா.

'சந்திரகிரிக் கோட்டை'யை எப்படிப் புகழ்ந்து எழுதுவது என்றே தெரியவில்லை. அவ்வளவு அருமை!

'கதை தந்த பரிசு' என்ற கதை விறுவிறுப்பாக இருக்கிறது.

'எத்தனும் எத்தனும்' தெனாலிராமன் கதையை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

'மூன்று கேள்விகள்' என்ற கதை புத்தி புகட்டியது. 'மயில் கண் வேஷ்டி' மாணவர்களுக்கு ஒரு நல்ல படிப்பினையாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

'இரும்பு மனிதன்' இதழுக்கே தனிச் சிறப்பளிக்கிறது. ஆசிரியரின் 'தூங்கும் அழகி' நம்மை விழித்திருக்கும்படி செய்கிறுர். பலே ஜோர்!

'கேளுங்கள், சொல்கிறேன்' என்ற பகுதியினால் பல விஷயங்களைச் சுருக்கமான முறையில் சிறுவர்களாகிய நாங்கள் அறிந்து கொள்கிறோம். எஸ்.பேபியின் விமர்சனக் கடிதம் சிறப்பாக உள்ளது.

ஆகவே இவ்விதழைப் போற்றுதற்குரிய "கலைப் பொக்கிஷம்" என்றே அழைக்கலாம்.

—கே. என். மகாலிங்கம்.
விஷ்ணுபுரம்.

பாராட்டக்கூடிய முறையில் எழுதியிருப்பவர்கள் :

1. M. கைலாசம், ஸ்ரீரங்கம், 2. பி. ஆர். உபைத், செய்யாறு. 3. வி. ஸ்ரீனிவாசன், சேலம். 4. நா. ராமகிருஷ்ணன், குளித்தலை. 5. ஆர். சாந்தா, கும்பகோணம். 6. ரா. வேங்கடேசன், கொத்தாம்பாக்கம். 7. தெ. குமாரசாமி, பணகுடி. 8. கே. பத்மநாபன், கணபதி நகர், தஞ்சாவூர். 9. வி. சரஸ்வதி, மயிலாப்பூர். 10, ஆர். எஸ். கந்தசாமி, மாம்பலம். 11. எம். ஆர். முத்துலக்ஷ்மி, மதுரை. 12. கே. எஸ். முகம்மதுசாலி, கட்டிமேடு.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

இடைப்பாடி { உபதலைவர்: ப. வேலுசாமி
செயலாளர்: ந. கலியன்
பொக்கிஷதார்: வை. கந்தப்பன் }

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. வாசகசாலை ஒன்றும் 'கதம்பம்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடத்தப்படுகின்றன.

உடுமலைப்பேட்டை சங்கிலிநாடார் வீதி. { உபதலைவர்: எஸ். சண்முகம்
செயலாளர்: பி. சி. சுப்புராஜு
பொருளாளர்: ஆர். கருப்புசாமி }

ஐந்து பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. "பாப்பா" என்னும் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

பேனா நண்பர்கள்:

1. எம். மணி 2/4-116, முதல் தெரு, வளையப்பட்டி, திருச்சி ஜில்லா.

2. வி. கிருஷ்ணமூர்த்தி, 6, ஆத்ரேயபுரம், சென்னை-24.

3. டி. பி. சுந்தர ராஜா, 42, வேவங்கே, கண்டி, இலங்கை.

4. ஆ சண்முகசுந்தரம், C/o சேதுராமலிங்க முதலியார், தெற்கு ஒப்பனைத் தெரு, தென்காசி.

5. என். புருஷோத்தமன், 15, சாலைத் தெரு, சென்னை-7.

6. கே. தேசிகன், S/o எஸ். வி. கேசவன், A. C. A., 35-A, போலீஸ் லைன், குகை, சேலம்.

7. ஆர். துவாரகாநாத், H-93, பாலபெட், பெங்களூர் ஸிடி.

8. ஆர். பாஸ்கரன், S/o ஆர். ஆர். ஐயர், 19, காண்ட்ராக்டர்ஸ் ஏரியா, ஜாம்ஷெட்பூர்.

9. டி. என். பாலசுப்ரமண்யம், திருவரங்கம் போஸ்டு, கள்ளக்குறிச்சி தாலுகா. (தெ. ஆ. ஜில்லா.)

10. ந. சங்கரசதாசிவன், C/o நல்லசிவன் பிள்ளை, பணகுடி.

11. டி. மீனாக்ஷி, டி. சரோஜா, டி. கலாமணி, 44, கஸ்து மேட்டுத் தெரு, வேலூர். (வ. ஆ. ஜில்லா.)

12. எஸ். ஐ. முஹமது ரபீக், 4/180-A, எக்ஸ்டென்ஷன், தர்மபுரி.

13. என். செல்வராசா, 13, நாச்சிமார் கோவில் ரோடு, யாழ்ப்பாணம், இலங்கை.

14. கே. ஆர். வி. கிரி, 7-34, கஸ்தூரிபாளையம், எஸ். ஆர். கே. வித்தியாலயம் போஸ்டு, கோவை ஜில்லா.

15. எச். அப்துல் மஜீத், 1-13, பண்ணைத் தெரு, ஆதிரங்கம், கட்டிமேடு போஸ்டு, தஞ்சை ஜில்லா.

புதிய கண்ணன் வெளியீடுகள்

ப வ ழ வ ல் லி

கி. ரா. எழுதியது

அது ஒரு தனி உலகம். அங்கே வசிக்கும் மனிதர்கள் எல்லாரும் விசித்திரமானவர்கள். பிராணிகளும் விசித்திர இயல்பு கொண்டவை. முத்துக்களும், நவரத்தினங்களும், பவழங்களும் விளையும் நாடு. அங்கே போய்ச் சேருகிறான் சுந்தரம். ராஜகுமாரி பவழவல்லியைச் சந்திக்கிறான். அவனால் ஆகாத காரியத்துக்கெல்லாம் ஆமை ஒன்று உதவுகிறது. பலவிதச் சோதனைகளில் அகப்பட்டுக்கொள்கிறான். மிகவும் சுவாரஸ்யமான கதை.

விலை 12 அணா

மின்னல் அரக்கன்

இதில் உள்ள கதைகள் எல்லாம் அற்புதமான கர்ண பரம்பரைக் கதைகள். மாயாஜாலங்கள் புரியும் மாயாவிகளும் சோதனைகளில் வெற்றி பெறும் வீரர்களும் ஆபத்தில் சிக்கித் தவிக்கும் ராஜகன்னிகைகளும் இந்தக் கதைகளில் பாத்திரங்களாக வருகிறார்கள். கதையின் போக்கும் கற்பனை அழகும் நம் உள்ளத்தைக் கவரக்கூடியவை. படித்துப் பாருங்கள்.

விலை 8 அணா

வால் அறுந்த குரங்கு

வால் அறுந்த குரங்கு, இதோ இந்தப் பிள்ளை, ஈயின் கதை முதலிய ஐந்து பாட்டுக் கதைகள் அடங்கிய சிறுவர் புத்தகம். பாட்டைப் பாடிக்கொண்டே எழுத்துக்களைக் குழந்தைகள் கற்றுக்கொண்டு விடுவார்கள். வர்ணப்படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

ச ம ர் த் து மை ன ா

தி. ஜ. ர. எழுதியது

இந்தப் புத்தகத்தில் எட்டுக் கதைகள் இருக்கின்றன. கதைகள் என்றால் கட்டுக் கதைகள் அல்ல. எல்லாம் உண்மைக் கதைகள்; விலங்குகள், பறவைகள் இவற்றின் குணங்களையும் பழக்க வழக்கங்களையும் உள்ளபடி சித்திரிக்கும் கதைகள். சுவையுள்ள கதைகள். அழகிய படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

க ண் ண ன் கா ரி யா ல ய ம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.